தென்மொழி

புதுமை என்னே?

இந்தியா முழுவதிலும் பெரும்பான்மை
மக்களால் ஏற்றுக் கொள்ள
முந்தையநாள் தலைவர்சிலர் இருந்திருக்கக்
கூடுமெனின் இற்றைநாளில்
அந்தநிலை இல்லையிது கண்கூடு
வருநாளில் முளைத் தெழுந்து
வந்திடுவார் என்றெண்ண வகையுமிலை
சிறிதேனும் கருது வீரே!

மக்கள்நலங் கருதுகின்ற பெருந்தலைவ
ரானாலும் எவ்வாற்றானும்
தக்கவரே யானாலும் தலைமைகொளும்
பெரும்பொறுப்பில் தென்னாட்டாரை
எக்காலும் விட்டுவைக்க மாட்டார்கள்
ஈதுறுதி காலைவாரிக்
கெக்கலிக்கும் மதமடர்ந்த கீழ்மனத்தர்
புன்செயலில் புதுமை யென்னே?

நேற்றிருந்த இந்தியா இன்றில்லை
இற்றைநாள் இருப்பிலேதும்
மாற்றமிலா நிலையேதான் நீடிக்கும்
என்றெவருங் கருதவேண்டா
ஏற்றமிகு தேசிய இனங்களெலாம்
தன்னுரிமை பெறவிடுத்தே
ஆற்றலுற ஒற்றுமையின் மேலோங்கத்
தக்கவழி யமைப்பீர் நன்றே!

- இறை

உள்ளே...

தமிழ்வழிக் கல்வியும் வேலைவாய்ப்புகளும்!

மருத்துவர் இராமதாசு உரை

புதிய பார்வை

சாகடிக்கப்படும் தமிழர் விழாக்கள்!

சிறிதேனும் தமிழ்த்தொண்டு செய்வீர்!

மக்களவை

நூல்நிறை

செய்திகள்

மற்றும் பிற...

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 29
ஓலை - 4
விலை உ/ரு. 4.00

தி.பி. 2028 மேழம் - 1997 ஏப்ரல்

வெறுக்கும் படியொரு புன்மை விளையினும்,
வீணர் பலரிகழ்ந் தலர்மொழி யுரைக்கினும்,
மறுக்கும் படியிலாக் குறைசில நேரினும்,
மாற்றவர் அவற்றையே மனஞ்சுடச் சுட்டினும்,
பொறுக்கும் நிலைக்கெலாம் இனநலம் பெரிதெனப்
பொறைதமிழ் நல்லினம் நினைந்திடல் வேண்டும்;
குறுக்கில் நுழைதலும் குப்புறக் கவிழ்த்தலும்
குலைத்திடும் குலைத்திடும் இனத்தினை, ஆதலால்!

தப்பித் தவறியோர் தலைவனிங் கெழுந்தது,முன்
தடங்கெட நடக்குநந் தமிழரைக் கூட்டியே
வெப்பினும் மழையினும் நமக்கென நடக்கையில்
வெறுக்கலி லாமன வேட்கையில் பிழைசில
திப்பியைப் போலவே தெரியினும் தேன்பெறுந்
தேவையால் இனநலங் காத்திடல் வேண்டும்;
துப்பலும் தூறலும் அடியறத் துணித்தலும்;
தொலைத்திடும் தொலைத்திடும் இனத்தினை, ஆதலால்!

நூறுநூ றாண்டுகள் நொடிந்திடு மோரினம்
நொண்டியின் நடைநடந் திளநடை பயில்கையில்
ஏறென முன்நடப் போன்மன ஏழ்மையால்
ஏதோ ஓரிரு பிழைசெயல் உண்மையால்
வேறெனக் கருதிடா தினநலம் பெரிதென
விறல்தமிழ் மறலினம் நினந்திடல் வேண்டும்;
காறலும் கனைத்தலும் கயமைகள் விளைத்தலும்
கவிழ்த்திடும் கவிழ்த்திடும் இனத்தினை, ஆதலால்!

பாவலரேறு

சுவடி 10. ஓலை- 7. 8.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் திபி1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும்; மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

தென்மொழி

மொழி—இனம்—நாடு

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி 29) திபி உ0உஅ மேழம் (ஏப்பிரல் '97) (ஓலை 4

T. 5850

தமிழ்வழிக் கல்வியும் வேலைவாய்ப்புகளும்!

தமிழ்நாட்டில் பலதுறைக் கல்வியும் தமிழ் வாயிலாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கை நிறைவேறும் வண்ணம் அரசு செயல்படத் தொடங்கியிருக்கிறது.

அண்ணா பல்கலைக் கழகத்தில் சில பாடப் பிரிவுகளைத் தமிழ்வழிப் பயிற்றுவிப்பதற்கு உரிய நடவடிக்கை யெடுக்கப்படும் என்றும், இதேபோன்று தன்னாட்சியுரிமை பெற்ற தனியார் கல்லூரிகள் இரண்டிலும் அரசுப் பொறியியற் கல்லூரி யொன்றிலும் இத் திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அண்மையில் கல்வியமைச்சர் அன்பழகனார் கூறியுள்ளார்.

மேலும் கல்.இ.,(B.Ed.) என்னும் ஆசிரியப் பயிற்சிப் பட்டப்படிப்பைத் தமிழில் வழங்குமாறு அரசு கேட்டுக்கொண்டிருப்பதாகவும், தொழில்நுட்பக் கல்வியிலும் தமிழில் பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், தமிழ்வழிப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்று கல்லூரிகளையும் பல்கலைக் கழகங்களையும் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழில் தேவையான பொத்தகங்களை வெளியிடவும், கல்லூரியில் தமிழ்வழி மாணவர்களுக்கான ஊக்க உதவித் திட்டத்துக்காகவும் பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவையெல்லாம் வரவேற்கத் தக்கனவே. ஆயினும் தமிழ்வழிக் கல்வி, பயிற்சியளவோடு நின்றுவிடாமல் வேலைவாய்ப்புக்கும் வழிவகை செய்தல் இன்றியமையாதது. அப்படிச் செய்தால் மட்டுமே இலக்கில் வெற்றிபெற இயலும்.

ஆட்சிமொழி என்னும் அளவில் அலுவலகங்களிலும் பிறவற்றிலும் தமிழ் முழுஅளவில் கடைப்பிடிக்கப்படுதற்கு அரசு மனம்வைத்துச் செயற்பட்டாலே மொழித் தொடர்புடைய பெரும்பாலான சிக்கல்கள் தீர்ந்துவிடும்.

தமிழ்நாட்டரசு அலுவலகங்களில் மட்டுமன்றித் தமிழ்நாட்டிலுள்ள வைப்பகங்கள், அஞ்சல், தொடர்வண்டி வாணாள் காப்பீடு உள்ளிட்ட நடுவணரசு அலுவலகங்களிலும் தமிழ்வழிக் கற்றோர் வேலைவாய்ப்புப் பெற ஆவன செய்தல் வேண்டும். இன்னுந் தனியார்துறை நிறுவனங்களிலும், தமிழ்வழிக் கற்றோர்க்கு வேலைவாய்ப்புக்கு வழிவகுத்தல் வேண்டும்.

தமிழ்வழிக் கல்வி பயில்வதற்கான ஊக்கம் என்பது, எதிர்கால நோக்கிலான வேலை வாய்ப்புப் பற்றியதாக இருக்கவேண்டுமே தவிர, உடனடி ஆசைகாட்டும் உதவித் தொகையாக இருக்கக் கூடாது.

கண்ணில்லாத இரவலன் ஒருவனின் அழுகுரலுக்கு இரங்கி அவன் முன் தோன்றிய தெய்வம், ஒரேயொரு ஈவு(வரம்) மட்டுமே அளிக்க இயலும் என்று கூறிய போது அவன், 'ஏழடுக்கு மாளிகையில், என் கொட்பேரனும் பேர்த்தியும் தங்கக் கிண்ணத்தில் அவர்தம் பெற்றோர் பாலுஞ்சோறும் ஊட்ட உண்டு மகிழ்வதை, என் இரு கண்ணாலுங் கண்டு இன்புற வேண்டும்' என்று வேண்டினான் என்று ஒரு கதையுண்டு. அது போல் தமிழ், அரசு மொழியாக அனைத்து நிலைகளிலும் முழு அளவில், நெகிழ்வின்றிச் செயற்படுத்தப்பட்டாலே எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது சொல்லளவிலின்றி எளிதில் நடைமுறைக்கு வந்துவிடும் என்பது உறுதி!

மிகுந்த அளவில் வேலைபெற வாய்ப்பற்ற துறைகளில் அறிமுகப்படுத்திச் சோர்வுபட்டு விட்டொழிக்காமல், மாணவர்களை ஈர்க்கும் வளமார் துறைகளில் தமிழ்வழிக் கல்வியைப் பயிற்றுவிப்பது இன்றியமையாதது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.!

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும்.

திருக்குறள் (663)

- இறை

பாவலரேறு தமிழ்க்களம் நிறுவுவோம்!

ஐயாவின் கொள்கைகளை ஏற்றுச் செயற்படுத்துவோம்!

மருத்துவர் இராமதாசு உரை.



சென்னை, மார்ச்சு 9 -

'பாவலரேறு ஐயா அவர்களுடைய கொள்கைகளை ஏற்றுத் தொடர்ந்து, அதற்கான களத்தை அமைத்துப் பாடுபடுவதற்கு அணியமாக உள்ளோம்' என்று பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் மற்றும் திருக்குறள் மெய்ப்பொருளுரை வெளியீட்டு விழாவுக்குத் தலைமையேற்று, உரையாற்றிய பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் மருத்துவர் இராமதாசு அவர்கள் கூறினார்கள்.

மருத்துவர் இராமதாசு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

"தனித்தமிழ் எண்ணத்தைத் தமிழகத்திலே இந்த அளவிற்கு வளர்த்து, ஐயா அவர்கள் விட்டு சென்ற அந்தப் பணியை எப்படித் தொடர்ந்து செய்வது என்று கருத்துகள் பலவாறு இங்குப் பேசப்பட்டன தமிழ் உணர்வாளர்களைப் பொறுத்தவரை தமிழகத்திலே தமிழ் படித்தவர்கள் இந்த இயக்கத்திற்கு அவர்கள் வரத் தயங்குகிறார்களா அல்லது அவர்களுக்கு உண்மையிலேயே செய்தி போய்ச் சேரவில்லையா அல்லது இதன் தேவை அவர்களுக்குத் தெரியவில்லையா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ் படித்தவர்கள் - பல்லாயிரக்கணக்கானவர்கள் தமிழ் நலக் கோரிக்கையை வைத்துப் போராடும்போது அது எந்த அரசாக இருந்தாலும் - தமிழினப் பகை அரசாகவே இருந்தாலும் அந்தப் போராட்டத்தை ஒடுக்கிவிட முடியாது; நசுக்கிவிட முடியாது. அந்த வகையிலே தமிழ்படித்தவர்களுக்குக்கூட இப்படிப்பட்ட இன்னொரு உணர்வை ஊட்டவேண்டுமென்ற ஒரு நிலையிலே தமிழகம் இருப்பதனாலேதான் இன்றைக்கும் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் - பயிற்சி மொழியாக வேண்டும் என்று நாம் குரல்கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் எங்கிருக்கிறது, எந்த இடத்திலே இருக்கிறது என்று கேள்வி கேட்கின்ற நிலையிலே நாம் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றோம். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லிவிட்டுப் போனார்கள், சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் அதை எங்கே தேடுவது என்கிற நிலையில் தமிழகம் இருப்பதை எண்ணிப்பார்க்கும் போது தமிழர் என்று சொல்லிக்கொள்கின்ற நமக்கு மிகவும் வெட்கமாகத்தான் இருக்கிறது!

இதை நீக்குவதற்கு எந்தெந்த வழிகளில் போராட வேண்டும் என்பதை அறிந்த நம் பாவலரேறு ஐயா அவர்கள் நமக்குச் சொல்லிச்சென்றிருக்கிறார்கள். அந்த வகையிலே நாம் போராடப் போகிறோமா என்பதை இந்த நேரத்திலே நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இங்கேகூட அமைச்சர் அவர்கள் பல கருத்துகளைச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். அவையெல்லாம் யானைப் பசிக்குச் சோளப் பொரி போடுகிறது போல்தான். ஏதோ செய்கிறோமென்று சொல்லுவது நமக்குத் தேவையில்லை. இதைச்செய்ய வேண்டுமென்று தமிழறிஞர்கள் சொல்லுவதை இந்த அரசு செய்துகாட்ட வேண்டும்.

'படிப்படியாக - ஐந்தாண்டுக் காலத்தில் என்று சொல்வதெல்லாம் சரியில்லை . . . நமக்குத் தெரிகிறது தமிழினப் பகைவர்கள் யாரென்று. மூன்று விழுக்காட்டினர். அதிலே இன்னும் சில விழுக்காட்டினரையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். தமிழுக்குப் பகைவர்கள் என்ற அந்த விழுக்காடு கொஞ்சம் பெருகியிருக்கிறது. அதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை..

நான்கூட அடிக்கடி செய்தித்தாள் வாயிலாகச் சொல்லிவருகிறேன். தமிழின அறிஞர்கள் பல்வேறு தமிழ் அமைப்புகள் எல்லாம்கூடி - நான்கைந்து அல்லது ஒருகிழமை கூடக் கூடித் தமிழுக்கு இந்த அரசு இவற்றையெல்லாம் செய்யவேண்டும் என்று ஆய்ந்தறிந்து, என்னென்னவெல்லாம் எந்தெந்தத் துறையிலே செய்யவேண்டும், உடனடியாகச் செய்யவேண்டும் உடனடியாகச் சட்டமியற்ற வேண்டும் என்று ஒரு நிலைப்பாட்டை யெடுக்கவேண்டும். அரசுக்குக் கூழ்ப்பாட்டு பாடுகின்ற அறிஞர்களும் கூட இருக்கிறார்கள். அந்த அறிஞர்களும்கூட இதில் கலந்து கொள்ளட்டும் நான் வேண்டாம் என்ற சொல்லவில்லை. ஆனால் ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் இயக்கங்களும் அறிஞர்களும் சேர்ந்து எடுக்கின்ற முடிவை இந்த அரசு கட்டாயம் செய்யவேண்டும். அதற்கு நாம் கட்டாயப்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை மிக விரைவில் இங்கே தமிழ் நாட்டிலே இருக்கின்ற அமைப்புகளெல்லாம் சேர்ந்து கலந்து, இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று அரசுக்கு நாம் சொல்லிக் கட்டாயப் படுத்தவேண்டும். அப்படி அரசு செய்யவில்லையென்று சொன்னால்

போராட்டத்தில் நாம் இறங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே தெளிவுப்படுத்த விரும்புகின்றேன்.

தமிழ்ப்பகைவர்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. தமிழ்ப்பகைவர்கள் இன்றைக்கு எல்லா வகையிலும் ஆக்கமும் ஊக்கமும் பெற்றுச் செயல் பட்டு வருகின்றார்கள். அந்தப் பகைவர்களை அழிப்பதற்கான முயற்சிகளிலே நாம் ஒன்றுகூடி இயங்கக்கூடிய நிலையிலே நாம் இல்லையென்பதை நான் வருத்தத்துடன் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈழச் சிக்கலைப் பொறுத்தவரையிலே நேற்றுப் பதினைந்து செய்தியாளர்கள் வந்திருந்தார்கள். அவர்களை நான் வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டினேன். சில இதழ்கள் சிங்கள அரசிடமிருந்து கைக்கூலி பெற்றுக்கொண்டு ஈழத்தமிழர்களுக்கு எதிரான நிலையை இங்கு - தமிழகத்தில் எடுக்கிறார்கள். இதைச் செய்தியிதழில் அப்படியே போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

'எங்களை' யெல்லாம் திறனாய்வு செய்கின்றீர்கள். ஆனால் இதழ்களை திறனாய்வு செய்யும்போதுமட்டும் அதைப் போட மறுக்கின்றீர்கள். கட்டாயம் போடவேண்டும். என்று கேட்டுக் கொண்டதற்கு ஏற்பச் சில செய்தியிதழ்களில் இந்தக் கைக் கூலிச் செய்தி வந்திருக்கின்றது. ஏனென்றால், சிங்கள அரசினுடைய இன்றைய நோக்கமே ஈழத் தமிழனுக்கு எதிரான பரப்புதலை உலகளாவிய அளவிலே செய்வதுதான் அதனைச் சிறப்பாக அவர்கள் செய்கிறார்கள்.

கனடா, இலண்டன் நாடுகளுக்கு நான் செல்லும் போது அங்கே கண்கூடாகப் பார்த்தேன். மற்ற நாடுகளிலிருந்து வாங்குகின்ற பணத்தை இந்தப் பரப்புதலுக்காக மிகவும் திறமையாகச் சிங்கள அரசு செலவிடுகிறது.

அந்தவகையிலேதான் இங்கு இந்தியாவிலேகூட மற்ற மாநிலங்களைவிட - வட இந்தியாவை விட - தமிழ்நாட்டிலே தமிழர்கள் வாங்கிப்படிக்கின்ற சில செய்தியிதழ்கள் மிகச்சிறப்பாகச் செயற்படுகின்றன. அதற்குக்காரணம் சிங்கள அரசு கொடுக்கின்ற இந்தப் பணம்தான். அதை நேற்று வெளிப்படையாகவே குற்றம்சாட்டினேன்.

இங்கே ஈழத்தமிழர்கள் சிக்கலைப் பேசுவதுகூடத் தவறு அல்லது குற்றம் என்ற நிலையை மாற்றிச் சிற்றூர் அளவிலே இந்தப் பரப்புதலைக் கொண்டு சென்று ஓரளவிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் அதன்பிறகு என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்யவேண்டியது நம் அனைவருடைய கடமையாகிறது.

அந்த வகையில் ஐயா ஆனைமுத்து அவர்கள் கடந்த 19 அன்று நடைபெற்ற மாநாட்டில் குறிப்பிட்டார்கள். 'இதற்காக இயங்கிய பேரமைப்புகள் முனைமழுங்கிப்போய்விட்டன; அல்லது செயற்படாமல் போய்விட்டன. அதனாலே வேறு அமைப்புகள் வேண்டும்' என்று சொன்னார். இதற்கென ஓர் அமைப்பை - ஒரு பெரிய அமைப்பைத் தோற்றுவித்து, 'இந்த அமைப்பிற்கு இந்தக் கூட்டத்திற்கு வருகிறவர்கள்தான் தமிழர்கள் - தமிழினத்தலைவர்கள்; மற்றவர்கள் எல்லாம் தமிழின எதிரிகள்' என்ற நிலையை நாம் உண்டாக்க வேண்டும். வெளிப்படையாக நாம் அறிவிக்க வேண்டும். (கைதட்டல்) யார் யார் வருகிறார்களோ அவர்கள்தாம் தமிழர்கள்; ஆதரவாளர்கள் என்று கொள்ள வேண்டும். இரண்டு மூன்று வாய்ப்புகள்கூட அவர்களுக்குத் தரலாம். ஒரே வாய்ப்பு என்றிருந்தால் 'எனக்கு வரமுடியவில்லை. எனக்கு இதைவிடப் 'பெரிய' வேலையிருந்தது. அங்குப் போயிருந்தேன்' என்றுகூடச் சொல்லுவார்கள். அதனாலே அவர்கள், அவர் அங்குப் போய்வந்த பின் அவர்களுக்கு வேறு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தினால் அதிலாவது அவர்கள் கலந்து கொள்ளுகிறார்களா என்று பார்க்கலாம். அதையும் நாம் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இந்தத் தமிழ்க்களத்தைப் பொறுத்தவரை மற்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரை எங்களுடைய பங்கு - பங்கு என்று சொல்வதைவிட பெரும்பங்கு கட்டாயம் இருக்கிறது என்று உறுதியளிக்கிறேன்.

ஏனென்றால் கால்கோள் விழாவிற்கு யான் எங்கும் செல்வதில்லை. ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால் நிறைய இடங்களில் அவ்வாறு செய்துவிட்டு நிறைவு செய்யப்படாமல் நின்று போய்விடுகின்றன. அதனாலேயே முடிவுபெற்ற பிறகு நிறைவு விழாக்களுக்கு மட்டும் செல்வதுண்டு.

ஆனால், இதற்கு நான் மகிழ்ச்சியோடு வருவதற்குக் காரணம் இது நடைபெற வேண்டும் என்று - நானே முன்னின்று அடிக்கடி வந்து பார்த்து, இது நடக்கவேண்டும் என்று - நடத்துகிறவன் என்ற நிலையிலே, கட்டி முடிக்கவேண்டும் என்ற நிலையிலே நான் இருப்பது தான். அந்த நல்லெண்ணத்திலேதான் நான் கலந்து கொண்டேன். அந்த வகையிலே இது கட்டாயம் நடைபெறும், நடைபெறவேண்டும். அதற்கு என்னுடைய ஒத்துழைப்பு உண்டு. ஒத்துழைப்புச் என்பதைவிட நாம் இருந்து இதை - செய்வோம். நானும் இருந்து இதை செய்கிறேன் என்று அந்த உறுதியை இந்த நேரத்தில் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை நாம் அடிக்கடி கூடி, எந்தவகையிலே செய்யவேண்டும் எப்படிச் செய்யவேண்டும். எந்தக் காலத்திற்குள்ளே செய்யவேண்டும்.

இதற்கு எந்த அளவுக்குப் பொருள் தேவை என்ற அளவில் பேசி அதைத் திரட்டுகின்ற முயற்சியில் நாம் ஈடுபடுவோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

நான் இது தொடர்பாக பதினைந்து நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பார்த்து, இந்த இடம் மிக சிறியதாக இருக்கிறது என்று கூறினேன். என்னுடைய எண்ணமெல்லாம் பத்து - பதினைந்து குறுக்கம் (ஏக்கர்) நிலத்தில் இது அமைய வேண்டும் என்று கூட நான் சொன்னேன். ஆனால் இங்கே அவருடைய நினைவிடம் அமைந்திருப்பதனாலே இதே இடத்திலே செய்யவேண்டும் என்று நண்பர்கள் சொன்னார்கள். பக்கத்திலே கூட இடமிருக்கிறது. அரசு நினைத்தால் இதையும் சேர்த்து சிறந்த இடமாக இந்தத் தமிழ்க்களத்தை உருவாக்கிவிட முடியும். அது தொடர்பாகக் கலைஞர் அவர்களிடம் நான் பேசியிருக்கின்றேன். இப்போதுகூட அமைச்சர் அவர்களிடம், கலைஞரிடம் நீங்களும் நினைவுபடுத்துங்கள் என்று கூறினேன். அந்தவகையிலே இந்த இடம் போதாது என்று - இதை விரிவுபடுத்த அரசிடமிருந்து உரிய நல் விடையை மிக விரைவில் எதிர்பார்ப்போம். அதற்காக நாம் காத்திருக்கவேண்டிய தேவையுங்கூடக் கிடையாது. நம்முடைய பணியை நாம் நினைத்ததுபோல் தொடங்குவோம் என்று இந்த நேரத்திலே, சொல்லிக் கொள்வதுடன், ஐயா அவர்களுடைய கொள்கைகளை நாம் ஏற்றுத் தொடர்ந்து அதற்கான களத்தை அமைத்துப் பாடுபடுவதற்கு அணியமாக (தயாராக) நாம் உள்ளோம் என்று கூறி, இந்த வாய்ப்பைத் தந்ததற்கு நன்றி கூறி அமைகிறேன்."

- இவ்வாறு மருத்துவர் இராமதாசு அவர்கள் உரையாற்றினார்கள்.

அமெரிக்க மண்ணில் தமிழ்ச் செய்திமடல்

அமெரிக்கா வாழ் தமிழர்கள் தமிழ் பயலவும் தமிழகச் செய்திகள் அறியவும், அமெரிக்கர்களுக்குத் தமிழை அறிமுகம் செய்யவும் கடந்த சுறவத் திங்கள் முதல் **'தமிழ் - செய்திமடல்'** - என்கிற மாத இதழ் வெளியாகி வந்துகொண்டுள்ளது.

கையெழுத்துப் படியாக வந்து கொண்டிருக்கிற அந்த இதழ் - சிறப்பான வகையில் அச்சு முறையில வெளிவர இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கத் தமிழுள்ளங்களின் இவ்வரிய முயற்சியை வாழ்த்துகிறோம்.

தொடர்புக்கு: Tamil News Letter,
Tucson Tamil Learning Centre,
3401. N. Columbus Blud # 5-0,
Tucson. Arizona - 85712.

புதிய பார்வை

- குமரிமைந்தன்

'தமிழர்கள் அறிவற்றவர்கள், விழிப்புணர்வற்றவர்கள், ஏமாளிகள், எடுப்பார் கைப்பிள்ளைகள், எவர் சொல்லிலும் மயங்கிவிடுபவர்கள்' என்றதான ஓர் ஓவியத்தை ஏற்படுத்துகிற நோக்கு, சென்ற நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்தே இங்குப் புகுந்துள்ளது. மாக்சுமுல்லரும் கால்டுவெலாரும் புகுத்திய ஆரிய - திராவிட இனக் கோட்பாட்டைத் தங்கள் தங்கள் நலன்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு, சாதி வெறியைத் தங்கள் உள்மனங்களிலிருந்து அழிக்க முடியாதவர்களால் இது பேணப்படுகிறது. ஆனால் நமக்குக் கிடைக்கும் வரலாற்றுத் தடயங்களோ வேறு செய்திகளைக் கூறுகின்றன.

அரசர்களுக்கும் மக்களுக்கும் இருந்த முரண்பாடுகள் பிசிராந்தையார் போன்றோரின் ஆக்கங்களில் வெளிப்படுகின்றன. வரி தண்டுவதைப் பற்றிய அவரது அறிவுரை ஒரு தடயம். சிலப்பதிகாரத்தில் அரசனுக்குரிய தலைக்கோல் மங்கையை கைப்பற்றும் பொருள் வலிமையை வாணிகனான கோவலன் பெறுவதும், அவன் மனைவி பாண்டிய மன்னனுடன் அவன் அரசியின் சாவுக்கும் (கொலைக்கும்?) காரணமாயிருப்பதும், மணிமேகலையைச் சாக்கிட்டுச் சோழ இளவரசன் கொலைப்படுவதும், சோழ மன்னனுக்கு நாகமங்கையிடம் பிறந்த இளவரசன் வாணிகர்களால் காணாதொழிக்கப்படுவதும் மன்னர்களுக்கும் வாணிகர்களுக்கும் இடையில் உருவான பெரும் பகைமையின் வெளிப்பாடுகள். இந்தப் பகைமையின் தூண்டுதலாகச் சமண, புத்த சமயங்களின் பின்னணி வாணிகர்களுக்கு இருந்தது. அதன் எதிர்வினைதான் அரசர்கள் வேத சமயத்தைத் தாங்கி நின்றது.

இந்தச் சமண சமய ஊடுருவல் அரசியல் பின்னணியோடு நடைபெற்றுள்ளது. கலிங்க மன்னான காரவேலன் என்ற சமணன் பொறித்த கி.மு. 123 - ஆம் ஆண்டைய அதிகும்பாக் கல்வெட்டு, முந்நூறாண்டுகளாகத் தமிழகத்தில் திகழ்ந்திருந்த மூவேந்தர்களிடையிலான கூட்டணியை அவன் உடைத்ததாகப் பெருமை பேசுகிறது.

இளங்கோவடிகளே அரியணை யேறத் தகுதியானவர் என்ற கணியன் கூற்றுகூடச் சேர நாட்டில் அரசுரிமைப் போரை ஏற்படுத்தும் அயலார் முயற்சியேயாகும். மணிமேகலையைக் காரணமாகக் காட்டிச்

சோழ இளவரசன் கொலைப்பட்டது உட்பட இச்சூழ்ச்சிகள் அனைத்தும் கவுடில்லியனின் பொருள்நூல் பரிந்துரைத்த அரசியல் சூழ்ச்சிகளில் அடங்கியவையே. பன்னீராயிரம் சிங்கள வீரர்களைக் கரிகாலன் சிறைப்பிடித்து வந்ததற்குத் தான் பழிவாங்கி விட்டதாக அச்சிங்கள மன்னனின் மகனான கயவாகு கூறியிருப்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் அவனது சூழ்ச்சிக்குச் சமய அடிப்படையிலும் சோழ, பாண்டிய அரசர்களின் மீதிருந்த வெறுப்பாலும் மணிமேகலை கருவியானாள் என்று தோன்றுகிறது. இலங்கைத் தீவுகளில் ஒன்றான மணிபல்லவத்திலிருந்து அவள் அமுதசுரபியைப் பெற்று வந்ததாகக் கூறப்படுவதிலிருந்து, ஒரு பஞ்சக் காலத்தைப் பயன்படுத்தி மணிமேகலையைக் கொண்டு துயர்துடைப்புப் பணி செய்து அவளுக்கும் மக்கள் சாய்காலை ஏற்படுத்தி, அவள் மூலம் கயவாகு தன் பழியைத் தீர்த்துக்கொண்டான் என்று கொள்ளலாம்.

இந்தக் கீழறுப்பு வேலைகளின் விளைவாக, வேங்கடமலை தொடங்கித் தமிழகத்தின் மலைப் பகுதிகளிலிருந்த கள்ளர் மரபினரும் பிறரும் உள்நாட்டில் படையெடுத்து ஆண்டனர். ஏற்கனவே மூவேந்தர்கள் மூலம் சாய்கால் பெற்று வஞ்சி நகரத்துக் கோயிலினுள் புகுந்து விட்டதாக இளங்கோவடிகளால் காட்டப்படும் சமற்கிருதம் இப்போதைய சமண, புத்த சமயப் பின்னணிகளால் களப்பிரர் ஆட்சி மொழியாகிறது. அன்றிலிருந்தே தமிழ் கோயில்களிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் அகற்றப்பட்டது.

களப்பிரர் காலத்திலிருந்து பல்லவர் காலத்தின் ஒரு கட்டம்வரை சமண, புத்த சமயங்கள் சார்ந்த அயல் வாணிகர்களால் தமிழகம் தாங்கொணாச் சுரண்டலுக்கு ஆட்பட்டதன் எதிர்வினையாக உருவான சிவனிய எழுச்சி, ஒரு தமிழ் வாணிகப் பெண்ணான காரைக்காலம்மையாரால் தொடங்கப்பட்டதும் பின்னர் வந்த சம்பந்தருக்கு வாணிகர்கள் முழு ஒத்துழைப்பை அளித்ததும் வெறும் சமய அடிப்படையில் அல்ல.

சமய அடிப்படையில் தோன்றிய தமிழகப் பொருளியல் மீட்பியக்கத்தின் பக்கவிளைவாக உயர்ந்த மேற்கட்டுகளைக் கொண்ட கோயில்களைப் பல்லவர்கள் அமைத்தனர். கோயில்களைப் பாதுகாக்க நிலங்களை எழுதி வைத்தனர். சிறுகச் சிறுகக் கோயில்களின்கீழ் நாட்டின் பொருளியல் சென்றது. பொதுமக்களிடம், குறிப்பாக வாணிகர்களிடம் செல்வம் குவிவது என்றும் ஆட்சியாளர்களின் அதிகாரத்துக்கு அறைகூவல் என்பதைச் சிலப்பதிகார, மணிமேகலை காலப் பட்டறிவு உணர்த்த, சோழ அரசர்கள் விளைநிலங்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே கோயில்களைக் கட்டத் தொடங்கினர். உயர்ந்த மதில் சுவர், அதில் கண்காணிப்புக் கூண்டாக அமைந்த கோபுரம் ஆகியவை மேற்கட்டின் இடத்தைப்

பிடித்ததுடன் கோயில்கள் படைவீடுகளும் ஆயின. இதற்காகத் தேவைப்பட்ட பூசகர்களுக்காகத்தான் வெளியிலிருந்து பார்ப்பனர்களை அரசர்கள் இறக்குமதி செய்தனரே யன்றி ஏமாளிகளாக இல்லை.

மக்கள் இதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கவில்லை. அரசர்கள் எழுதி வைத்த முற்றூட்டுகளைக் கைப்பற்றினர். அதனால்தான் முற்றூட்டுகளைக் குறிக்கும் கல்வெட்டுகளில் அம்முற்றூட்டுகளைப் பறிப்போருக்கு ஏற்படும் சாவங்களும் இன்று சொல்லக் கூசும் அருவருப்பான வசைகளும் இடம்பெற்றுள்ளன.

இத்தகைய மக்கள் எழுச்சியின் ஓர் உச்சியாக அதிராசேந்திரன் என்ற சோழ மன்னன் கொல்லப்பட்டான். கோயில்கள் இடிக்கப்பட்டன. பார்ப்பனர்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கலகத்தினூடாகச் சோழநாட்டு அந்தப்புரச் சூழ்ச்சியும் சேர்ந்து சாளுக்கிய மன்னனான குலோத்துங்கன் அரியணை ஏற வழிவகுத்தது. அவனோ வலங்கை - இடங்கைப் பிரிவால் மக்களிடையில் மாறாப் பகையை ஏற்படுத்தி மக்களைத் தங்களுக்குள்ளாகவே போரிட வைத்தான்.

சிவனியத்தின் பெயரால் மடங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் மக்களைச் சுரண்டியதையும் மக்களைப் பிளவுபடுத்தியதையும் முறியடிக்க, இராமானுசர் மாலியத்தின் வடிவத்தில், ஒதுக்கப்பட்ட மக்களைப் பார்ப்பனராக்க முயன்ற போது அவரை நாடு கடத்தினான் சோழமன்னன். அவர் கன்னட மண்ணில் அடைக்கலம் புகுந்தார். சோழர்களின் குலப்பகைவர்களான புலிகடிமால் என்றழைக்கப்பட்ட போசாளர்கள் தமிழகத்தின்மீது படையெடுத்த போது தமிழகத்திலிருந்து மாலியர்கள் அவர்களுக்குத் துணைநின்றனர். தெலுங்கர்களுக்கும்கூட மாலியர்களின் துணை கிடைத்தது.

மதுரை அரசுரிமைக்காகப் போட்டியிட்ட பாண்டிய இளவரசர்களால் வரவழைக்கப்பட்ட முகமதியர்களாலும் அவர்களை முறியடிக்க வந்த விசயநகரத்தாராலுமாகத் தமிழகம் அலைக்கழிப்புக்குள்ளானது. மக்கள் ஒருபுறம் வலங்கை-இடங்கை எனத் தமக்குள் போரிட்டுக் கொள்ள, ஆட்சியாளர்கள் கோயில்களிலும் அரண்மனைகளுக்குள்ளும் திரண்டு கிடந்த செல்வங்களுக்காகப் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு மக்களிடையிலும் ஆட்சியாளர்களிடையிலும் நாடு, மொழி என்ற உணர்வுகள் துப்புரவாகத் துடைத்தெறியப்பட்டுவிட்டன. இந்தச் சூழ்நிலைகளிலும் ஆட்சியாளர்கள், தங்களை அவ்வப்போது மக்களோடு தொடர்புப்படுத்தித் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகளாலும், ஆட்சியாளர்களோடு தொடர்பற்றுப் போன உள்ளூராட்சிகளாலும் ஆட்சியாளர்களிடமிருந்து முற்றிலும் அயற்பட்டு நின்ற மக்களிடையில் ஒரு வியத்தகு நிகழ்ச்சியாகத் தமிழ்

தன் உயிரைப் பிடித்துக்கொண்டு பிழைத்து நின்றது. ஆனால் மக்கள் கைகளில் செல்வம் திரளுவது தங்கள் முற்றதிகாரத்துக்கு என்றும் அறைகூவல்தானென்ற உள்ளுணர்வால் மக்களிடம் செல்வம் திரளாமல் கோயில்களின் மூலம் சுரண்டுவது மட்டும் தொடர்ந்தது.

வாணிகர்கள்மீது ஆட்சியாளர்கள் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சியை அறிந்து தமிழகத்துக்கு வெளியே அவர்கள் அமைத்த வாணிகக் கூட்டணிகளைச் சோழப் பேரரசர்கள் படையெடுத்து அழித்தனர். தமிழகத்துக் கப்பல் வாணிகர்கள் சாவா, சுமத்திராத் தீவுகளில் நடுவம் கொண்டிருந்ததை அழிக்கவே இராசேந்திரன் அங்குப் போர் தொடுத்தான். அவனால் ஒடுக்கப்பட்டமையால் பின்னாளில் முகமதியத்துக்கு மாறிய தமிழ் வாணிகர்களால்தான் அந்நாடுகளில் இன்றும் முகமதியம் நிலைத்து நிற்கிறது.

வாணிகர்களுக்கு ஓரளவு செயலுரிமை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் கிடைத்தது. ஆனால், ஆவடியில் நடைபெற்ற பேராயக் கட்சி மாநாட்டில் நிகரமை திட்டம் கைக்கொள்ளப்பட்ட பின் அதற்கும் முடிவு வந்தது. எஞ்சியிருந்த முதலாளிகள் *1975* - இல் செயப்பிரகாசர் தலைமையில் இந்திராகாந்தியின் முற்றதிகாரத்தை எதிர்த்த போது அவர்கள் மீது பொருளியல் தாக்குதல் நடத்த உம்பர் வரி (Super Tax) என்ற பெயரில் *97.5* விழுக்காடு வருமான வரியை ஏவி விட்டபின் இந்தியாவிலுள்ள எந்த முதலாளியும் ஆட்சியாளரை எதிர்த்து அரசியல் களத்தில் நுழையவில்லை.

இந்த நிலையில் ஏற்கனவே மும்பை முதலீட்டின் தாக்குதலால் திணறிக் கொண்டிருந்த தமிழகப் பொருளியல், நயன்மைக் கட்சியில் ஏற்பட்ட தொய்வு காரணமாகவும், பின்னர் வந்த தலைவர்கள் இரண்டகம் செய்ததாலும் முழுமையான வீழ்ச்சியைச் சந்தித்தது. இன்று இந்த மண்ணில் நின்று வாழவே முடியாமல் எங்கு, எப்படி ஓடலாம் என்று திகைத்து நிற்கும் நடுத்தரத் தமிழனுக்கு நாடு பற்றியும் மொழி பற்றியும் சிந்தனை எழவே வழியில்லை.

இங்கே வாழ்வு தேடிக் குடியேறிய மக்கள் பலர் இருக்கலாம். ஆனால் இங்குள்ள ஆட்சியாளர்களுக்கு மக்களிடமிருந்து அறைகூவல்கள் எழாமலிருக்க அவர்களின் பொருளியல் உரிமைகளை நசுக்கச் சமயத்தை ஒரு கருவியாக்கி அதற்காக ஆட்சியாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பார்ப்பனர்கள் மூலமாகத்தான் வந்தேறிகள் வலிமை பெற்றார்களேயன்றித் தமிழக மக்களின் அறியாமையினாலும் மடமையினாலுமன்று. வலியப் புகுத்தப்பட்ட வறுமையும் இல்லாமையும் கல்லாமையும்தாம் அவர்களை எதிர்ப்பாற்றல் அற்றவர்களாக்கியுள்ளன.

'பிருகத்சாரியம்' என்பதும் உண்மையில் ஆரியப் குடிப்பெயர்ச்சியைக் குறிப்பதன்று. மோரியப் பேரரசு வீழ்ச்சிக்குப் பின் சமணமும் புத்தமும் தேங்கிநின்ற நிலையில் இந்தியாவிலுள்ள பார்ப்பனர் அனைவரையும் ஒன்றிணைக்க நாடெல்லாம் பெருஞ் செலவுகளை (பயணங்களை) மேற்கொண்டவர்களே பிருகத் சாரணர். இவர்களைப் பற்றிச் சிலப்பதிகாரத்தில் மிகுதியாகவே தடயங்கள் உள்ளன. மாங்காட்டு மறையோன், கௌசிகமாணி, பராசரன் போன்றோர் இடைவிடாத செலவு மேற்கொள்வதை அறிகிறோம். கங்கைக்கரை, காவிரிக்கரை, வையைக்கரை, வஞ்சிநகர் என்று எங்கும் திரியும் மாடல மறையோன் பிருகத் சாரணத்துக்குத் தெளிவான சான்று. பனிமலை (இமயம்) நோக்கிச் செல்லும் செங்குட்டுவனிடம் அம்மலைச் சாரலிலிருக்கும் அந்தணர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் தமிழகத்துப் பார்ப்பனர், இந்தியா தழுவிய பார்ப்பனக் கூட்டணிக்கு ஐயத்துக்கிடமற்ற சான்று.

சாரணர் என்றால் தொண்டர் - சமயத் தொண்டர். சமணச் சாரணரைப் பற்றியும் சிலப்பதிகாரம் சொல்கிறதன்றோ? உண்மையில் ஆரிய இனமென்பதே ஒரு கற்பனை. இந்தியா முழுவதுமுள்ள பூசாரியர் இணைந்து உருவாக்கிக் கொண்ட பண்பாட்டு அடிப்படையிலான ஒரு தனித்தன்மை, அவர்களை ஒரு தனி மாந்த இனமாகக் காணும் மயக்கத்தை மாக்சுமுல்லருக்கு ஏற்படுத்தியது. அதை அவர் கைவிட்டாலும் நம் உள்மனத்தில் பதுங்கியிருக்கும் சாதிவெறியால் உருவான குற்ற உணர்வு அவ்வெறிக்கான பழியைப் போடுவதற்குக் கற்பனையான இவ்வாரிய இனத்தை உயிரோடு பேணி வைத்துள்ளது. அதற்காக நாம் சொந்தச் சிந்தனை இல்லாதவர்களாக, எடுப்பார் கைப்பிள்ளைகளாகக் காட்டிக்கொள்ளவும் தயங்கவில்லை.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் நம் ஆட்சியாளர்கள், தங்கள் அதிகாரத்தைக் காத்துக்கொள்ளக் காலங்காலமாய் நம் பொருளியல் உரிமைகளைச் சமயங்களின் வடிவிலே, நிகர்மை போன்ற மாந்தநேய வடிவிலே, மக்கள் நல அரசு என்பது போன்ற அரசியல் வடிவிலே பறிப்பதும், அதற்கெதிராக மக்கள் போராடுவதும், அப்போராட்டத்தைச் சிதைப்பதற்காக மக்களிடையில் வேற்றுமைகளை விதைப்பதும், விதைக்கப்பட்ட வேற்றுமைகளை நாமே சுமந்து அவற்றை மரமாக வளர்ப்பதுமாகச் சுழன்றுகொண்டிருக்கிறோம்.

மக்களுக்கு விளங்காத மொழியையே ஆட்சியாளர்களும் பூசகர்களும் எப்போதும் விரும்புவர். அப்போதுதான் அவர்களது அதிகாரம் நிலைத்து நிற்கும். அவர்களது இறுதிக் குறிக்கோள் மக்களைச் சுரண்டுவதே. அதற்காகவே மொழி அடிமைத்தனம் உட்பட அனைத்து அடிமைத்தனங்களும் சுமத்தப்படுகின்றன.

எனவே இவ்வடிமை விலங்குகளை உடைத்தெறிய வேண்டுமாயின் நாம் இதுவரை சிந்தித்தே பார்த்திராத, நாம் நுகர்ந்தே இராத பொருளியல் உரிமைகளுக்காகப் போராட்டம் ஒன்றை உடனடியாகத் தொடங்க வேண்டும். அந்த மாபெரும் போராட்டத்தின் படைவிசையாக மக்கள் அணிதிரள வேண்டுமாயின் நாம் நம்மையறியாமல் நம் உள்மனத்தில் தேக்கி வைத்திருக்கும் சாதிவெறியை வெளியேற்றி அழிக்க வேண்டும்.

மொழியைக் காட்டியோ பண்டைப் பெருமையைக் கூறியோ மக்களைத் திரட்டி ஓரெல்லைவரைதான் செல்ல முடியும். அந்த எல்லையை நாம் என்றோ எட்டியாயிற்று. அதிலிருந்து நம்மால் முன்னோக்கி நகர முடியவில்லை என்பதை நாமெல்லோரும் பட்டறிந்துவிட்டோம். இனிப் பொருளியல் உரிமையை நோக்கிய போராட்டத்தின் மூலம்தான் மொழியையும் நாட்டையும் நம் தன்மானத்தையும் காக்க முடியும்.

அதற்கு மாறாகப் பார்ப்பனர்களின் ஏமாற்றுக்கு நாம் ஈராயிரம் ஆண்டுக் காலம் இடம் கொடுத்துள்ளோம் என்றும் அவர்களது மேலாண்மையைக் கேள்வியின்றி ஏற்றுக் கொண்டோமென்றும் உண்மைக்குப் புறம்பானவற்றை, ஒன்றரை நூற்றாண்டு கூறி வந்ததையே, ஒப்பித்தோமாயின் அப்பொய்ம்மை வரும் தலைமுறையின் ஊக்கத்தையும் தன்னம்பிக்கையையும் தன்னுறுதியையும் அழித்துவிடும். அது எதிரிகளுக்கு வலுச்சேர்க்கும். ●

இப்படித்தான் சொல்ல முடியும்!

இந்தியா விடுதலை பெற்று ஐம்பதாண்டு - பொன்விழாக் கொண்டாட்டம் தொடங்கியிருக்கிறது. அண்மையில் தாசுமகாலில் இந்தியப் பொன்விழாக் கொண்டாட்டத்தை 'யானி' - என்கிற மேலைநாட்டு இசைக் கலைஞரை அழைத்து இசை நிகழ்ச்சி நடத்திக் கொட்டமடித்தனர்.

அதற்குப் பலகோடி உருவாயை இந்திய ஏழைநாடு வாரி இறைத்தது. விடுதலை *(!!)* இந்தியா*(!!)*வில் இசையமைப்பாளர் எவரும் தகுதி வாய்ந்தார் இல்லை போலும்!

ஒரு வேளை யானியைப் போல் சிறப்புப்பட்டம் பெற்ற, யானியை விடச் சிறப்பான இசை அறிஞர் 'மாஸ்ட்ரோ' இளையராசாவைத் தமிழ்நாட்டுக்காரர் என்பதால் வெளிநாட்டினர் என எண்ணிப் புறந்தள்ளி விட்டனரா என்ன?

'இந்தியனாய் இரு, இந்தியப் பொருளை வாங்கு' - என்கிற அவாள்களின் கூத்தாட்டங்களுக்கு வெளிநாட்டு வெறியிசைகள் தாம் தேவைபோலும்!

பெருஞ்சித்திரனார் நூல்களை

நாட்டுடைமையாக்க

பேரா. தீரன், பழ. நெடுமாறன்

அரசிடம் கோரிக்கை!

தனித்தமிழின் தந்தையாக விளங்கிய மறைமலையடிகளாரின் நூல்களை இப்போதைய தமிழக அரசு நாட்டுடைமையாக்கிப் பெருமைகொண்டது. நெடுங்காலத்திற்குப் பிறகு தமிழறிஞர்களைப் புரந்துகொள்வதும் அவர்களின் ஆக்கங்களைப் பரப்ப வழிசெய்வதுமான செயல்களை அரசு செய்வதற்கு இப்போது ஒரு வாய்ப்பு அமைந்துள்ளது. அதைப் படிப்படியாகக் கலைஞரைத் தலைவராகக் கொண்ட தி.மு.கழக அரசு செய்ய முனைந்துள்ளது தமிழுக்கு ஆக்கமும் நன்மை பயப்பதுமாகும். அவ்வழியில், தம் இறுதி மூச்சளவும் தமிழ் மொழி இன நாட்டிற்காகவே பாடுபட்ட பாவலரேறு ஐயா அவர்களின் நூல்களையும் நாட்டுடமை யாக்க வேண்டும் என்னும் கோரிக்கை அரசியல் மட்டத்திலும் அறிஞர் மட்டத்திலும் அரசை நோக்கி எழுந்துள்ளது.

கடந்த மார்ச்சுத் திங்கள் தமிழக அரசு வரவு செலவுத் திட்டத்தின் மீதான உரையில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் தீரன் அவர்கள் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசின்முன் வைத்துள்ளார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு பழ. நெடுமாறன் அவர்கள் மறைமலையடிகளாரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருப்பதை வரவேற்று, அத்துடன் தமிழறிஞர் பலரின் நூல்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் வகையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நூல்களை நாட்டுடைமையாக்கத் தமிழக அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதே போன்ற ஒரு கோரிக்கையை 'வள்ளுவர் வழி' இதழ் ஆசிரியர் கல்லை. திரு. தே. கண்ணன் அவர்கள் தம் ஆசிரியவுரை வழி எழுதியுள்ளார். அது வருமாறு:

"மறைமலை அடிகள், தேவநேயப் பாவாணர் வழித் தனித்தமிழ் இயக்கம் வளரவும் தமிழின மேம்பாட்டுக்காவும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் மூச்சுள்ள வரை அயராது அரும்பணியாற்றினார்

தனித்தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழின மேம்பாட்டுக்காகவும் அரும்பாடுபட்ட அவருக்குக் கிடைத்த பரிசுகள், சிறைவாழ்வும் ஒரு சாராரின் ஏச்சும் பேச்சுந்தான்.

தமிழ் அறிஞர்களுக்கும் பாவலர்களுக்கும் நம் தமிழக அரசு நினைவுச் சின்னங்கள் - மணிமண்டபங்கள் எழுப்பியும் சிலைகள் நிறுவியும், அவர்தம் நூல்களை அரசுடைமை ஆக்கியும் பெருமை சேர்த்துவருகிறது. பாராட்டுகிறோம்.

அதேபோல் நம் தமிழக அரசு, பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் நூல்களை அரசுடைமை ஆக்கி, அரசே அவர் தம் நூல்களை மலிவு விலையில் பதிப்பித்து மக்களுக்கு வழங்கவும்; தற்போது அமைய இருக்கும் 'தமிழக்களத்'தைப் பெரும் அளவில் தமிழக அரசே முழுப் பொறுப்பேற்று நிறுவி அவ்விடத்தில் தமிழ் ஆய்வு நடைபெறும் வகை நினைவுச்சின்னம் ஏற்படுத்தவும்; சென்னையில் அவர் வாழ்ந்த பகுதியில் அன்னாருக்குச் சிலை ஒன்றை எழுப்பிடவும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் வழிமுறையினரின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்."

அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

நம் பாவலரேறு ஐயா அவர்கள் விட்டுச் சென்றப் பணிகளை தொடர்ந்து செய்து நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டின் காரணமாகவே கடுமையான பொருளியல் சிக்கல்களுக்கிடையிலும் 'தென்மொழி'யை இடையீடின்றி வெளியிட்டு வருகிறோம். மேலும், தென்மொழி நாள்காட்டி, நூல்கள் வெளியீடு, மலர் வெளியீடுகளையும் தொய்வின்றிச் செய்து வருகிறோம். அடுத்துப் பாவலரேறு ஐயா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு மலர் வெளியீட்டு முயற்சியும் தொடங்கப்பெற்றுள்ளது.

இந்நிலையில், தென்மொழி முகவர்கள், அன்பர்கள் தம்மிடம் நிலுவையாக வைத்துள்ள தொகைகளை விடுத்து வைத்தால் மட்டுமே நாம் தொடர்ந்து செயற்படமுடியும். ஆகவே, தொடர்புடையவர்கள் அனைவரும் தங்கள் நிலுவைத் தொகையை விரைந்து விடுத்து வைத்து நம் அரிய பணிகளுக்கு துணை நிற்குமாறு வேண்டுகிறோம்.

- ஆசிரியர், 'தென்மொழி'

சாகடிக்கப்படும்
தமிழர் விழாக்கள்!

- பித்தன்

தி.பி. 2000. (1969) பறம்புக்குடியில்

உலகத் தமிழ்க் கழகத்தின் தொடக்க மாநாடு.

— 'தென்மொழி' - தன்னின் அரிய முயற்சியின் தொடர்ச்சியாய்த் தனது பத்தாண்டு பணிகளின் பாதையில் தொடங்கப்பெற்ற உலகத் தமிழக் கழத்தின்-முதல் ஆண்டுத் தமிழக மாநாடு அது.

தமிழ் உணர்வால் தம்மைச் செழுமைப்படுத்திக்கொண்ட தென்மொழி அன்பர்களும், தமிழ் அன்பர்களும் குடும்பமாய்க் குழுமினர்.

'திருக்குறள் பிறந்து ஈராயிரம் ஆண்டு சென்றும், இருக்கும் உன் நிலையில் இமி உயரவில்லையே - தமிழா நீ'-என்று வருந்தி எழுதிய நம் பாவலரேறு அவர்களின் உணர்வுகளுக்கு ஊக்கம் கொடுத்த நிகழ்ச்சி அது.

மொழிக்காகவும், இனத்துக்காகவும், தமிழர் தம் கலை - இலக்கியப் பண்பாட்டுக்காகவும் ஆன எழுச்சிகள் பல வடிவங்களாய் ஆங்காங்கிருந்து கிளர்ந்தன.

நெய்வேலி இசைக்குழு, வெங்காலூர் நாடகக்குழு - என்பதோடு அல்லாமல் ஏராளமான தூயதமிழ் இதழ்கள் தமிழகத்தை வலம் வந்தன.

தமிழ் உணர்வு கொழுந்து விட்டெரிந்தது.

'உங்கள் குடும்பம் ஒரு தமிழ்க் குடும்பமா?'- என்று துண்டறிக்கைகள் போட்டுத் தமிழகம் முழுதும் பரப்பினர் தமிழ் அன்பர்கள்.

பொதுவுடைமை இயக்கங்கள் ஆரியப்பார்ப்பனியச் சிந்தனையர்களோடு சேர்ந்து கொண்டும் தாமே அவர்களாக இருந்து கொண்டும் தமிழிய உணர்வெழுச்சியைக் கொச்சைப்படுத்தத் தொடங்கின.

அன்றைய சூழல்களின் வளர்ச்சியில் இன்றைய சூழல் இருக்கிறதா என்று ஒப்பிட்டுப் பார்த்தல் தேவையாகின்றது.

தமிழிய உணர்வு பரவலாக வளர்ந்துள்ளது உண்மைதான். அரசும்கூட மக்கள் எழுச்சியின் அழுத்தத்தால் தமிழ்வளர்ச்சிக்கெனத் தனிஅமைச்சுத் துறையை ஏற்படுத்தியுள்ளது. பொதுவுடைமை இயக்கங்களில் பல தமிழ்த் தேசிய நலனையே முதன்மை நோக்கமாக ஏற்றுத் தம்மை மாற்றிக்கொண்டுள்ளன.

ஆனால், தமிழர்தம் உரிமை மீட்புக்கான பணி இன்ன இன்ன துறையினது என்று ஒரு சில துறைகளை மட்டும் நாம் வரையறுத்திட இயலாது.

மொழி, இன அளவிலான நம் உரிமைக் காப்புகள் எந்த அளவில் தேவையோ, அந்த அளவில் நம் இன மீட்புக்கான கலை, இலக்கியப் பண்பாட்டு வளர்ச்சியும் தேவையானது.

அடிமையுற்ற மக்களின் விடுதலைக்கான கலை இலக்கியங்கள் அந்த அடிமை மக்களிடையே வேரூன்றாமல், அவ் விடுதலைக்கான கருத்து பரந்துபட்ட மக்களின் கருத்தாக மாறிவிடமுடியாது.

இம் மக்களின் நாட்டுப் புறக் கலைகள் அனைத்தும் முற்காலத்தில் தம் வாழ்வியல் அவல நிலைகளை வெளிப்படுத்துவனவாய் இருந்து, இக்கால் அது ஆரியப் பார்ப்பனியப் பாரத, இராம கதைப் புளுகுகளையோ அல்லது வல்லரசிய, முறைகேடான பாலியல் திரைக் கதைகளையோ தழுவியவாக அமைந்து விட்டன.

இம் மக்களின் விழாக்கள் இன்னவை என்று இக்கால் தமிழகத்தின் மக்களிடையே மேற்கொள்ளப்பெறும் விழாக்களைச் சுட்டிச் சொல்லல் இயலாததாகிவிட்டது.

விழாக்கள் என்பவை இம் மக்களைப் பண்பியல் அடிப்படையில் வளர்ப்பனவாய் அமைந்திருக்கின்றன.

பொங்கலைத் 'தமிழர் திருவிழா' என்றழைத்து வாழ்த்துகளுடன் பரப்பப்பெற்றாலும் இன்று அது 'மகரசங்கராந்தி' - என்று தொலைகாட்சியாலும், வானொலியாலும் பரப்பப்படுகின்றது.

பிள்ளையார் பிறந்தநாள்விழா பெரிதாக கிளப்பிவிடப்பட்டு, இன்று தமிழர்களைக் கூறுபோடுகிற ஒரு மதவெறி ஆரியப் பார்ப்பன வெறியாட்டமாகவே மாற்றப்பட்டுள்ளது.

பிள்ளையார் சிலைகள் தெரு முனைகளில் உயரம் உயரமாக நிறுத்தி வைக்கப்பெற்று, மதவெறி யூட்டுகிற வகையில் 'வீரவிக்னேஷ்வர்' 'வெடிகுண்டு விநாயகர்' என்றெல்லாம் பெயர் வைத்தும், புனைவுகள் செய்தும் - இளைஞர் இளைஞைகளைச் கவர்ந்து ஆட்டம் போட வைக்கும் போக்குகளே இன்றைய இந்து முன்னணி இயக்கங்களால் செய்யப்பெறுகின்றன.

அரசின், பிற தனியார் முதலாளிகளின் பரப்பல் துறையாக அமைந்துள்ள தொலைக்காட்சிகள் இக் கழிசடைக் காட்சிகளையே காட்டிவருகின்றன. பாலியல் முறைகேடுகள், தனிமாந்த வன்முறைக் காட்சிகள், மதவியல் பொய்மைகள் இவற்றைப் பரப்புவதையே வேலையாகக் கொண்டுள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்தே தமிழ்ப் பண்பியலைச் சிதைக்கின்றன.

தீண்டாமையாலும், குமுக இழிவுகளாலும் ஓட்டாண்டிகளாக்கப் பெற்றுள்ள இன்றைய தொல்தமிழ்க் குடிகள் இத்தகைய ஆண்டைப் பண்பியலுக்கும் அடிமைப்பட்டுப் போகின்றன.

'ஓலி (ஹோலி)ப் பண்டிகை'-என்கிற சாயப்பூச்சு வடநாட்டு விழா தமிழர்களிடையே பரப்பப்படுகிறது.

இராமனுடைய 'லீலை' - என்று கூறி, இராவணனின் வெட்டுருவைப் பெரிய அளவில் செய்து அதை வெடிவைத்துத் தகர்க்கின்றனர்; அதை வேடிக்கைப் பெருவிழாவாக இந்தியத் தலைமைப் பொறுப்பினர் எல்லாம் கண்டுகளிக்கின்றனர். இது தமிழர் எதிர்ப்பு விழாவாக அன்றோ இருக்கிறது.

எதையும் இந்தியப் பார்ப்பனியத் தன்மை என்கிற அளவில் ஏற்பது - அல்லது அதற்குள்ளடக்குவது என்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது ஆரியப் பார்ப்பனியம்.

எனவே - பார்ப்பனிய இந்தியா ஏற்றுக் கொள்ளுகிற விழாக்களும் பண்பாடும் கலைகளும் இலக்கியங்களுமே விழாக்களாக, பண்பாடாக, கலையாக, இலக்கியங்களாக இந்தியாவில் ஏற்கப்படுகின்றன - பரப்பப்படுகின்றன.

வெளிநாடுகளில் சென்று வெறியாட்டம் போடுகிற ஆட்டங்களே 'இந்தியக் கலை-பண்பாடு'- என்று குடுமி மோந்து கொண்டது ஆரியப் பார்ப்பனியம்.

தமிழர்கள், தாம் ஆரியப் பார்ப்பனியத்திடமும் பிற ஆண்டை வகுப்பாரிடமும் எந்தவகையில் எல்லாம் தோல்வி கண்டனரோ, அவையெல்லாம் சிறப்பு நாள்களாக - விழாக்களாக அவ்வாண்டைகளால் நம்மீது திணிக்கப்பட்டன.

நாமும் அவற்றை நமக்கான விழாக்கள் என நம் அறியாமையாலும் அடிமைத்தனங்களாலும் ஏற்று நம் பண்பாட்டுக் கூறுகளை இழக்கலானோம்.

இருந்த நம் வரலாற்றுப் பண்பாட்டை, உழைக்கும் மக்களாகிய நாம் மீட்டு, நம் உரிமைக்கான நோக்கங்களை - அதன்வழி எழுச்சிகளை

உணர்த்துகிற வகையில் விழாக்களாக்குவதும் நம் கடமையாதல் வேண்டும்.

திருவள்ளுவர் பிறந்த நாள் விழா அரசு விழாவாகமட்டும் தேங்கிக் கிடக்கிறது. ஆனால் அதே போது அன்றைய நாள் மாட்டுப் பொங்கல் நாளாகச் சிற்றூர்களில் மாட்டுக்கான பூசைகள் நடத்தப்படுகின்றன.

திருவள்ளுவரைப் படத்தின் மூலம் தெரிந்து கொள்ளுகிற இத் தமிழ்க் குமுகம், திருவள்ளுவரின் செய்திகளை மிகக் குறைவாகவே அறிய முடிந்திருக்கிறது.

ஆக, இவற்றையெல்லாம் மாற்றுவது எப்போது?

நம் குமுக விடுதலை எழுச்சிக்கான சிந்தனைகள் போற்றப்படவும், பின்பற்றப்படவும் தக்கவகையில் அவை கலைகளாகவும், பண்பாட்டு நிகழ்ச்சிகளாகவும், இலக்கியங்களாகவும் ஆக்கப் பெறாத வரையில் - நம் தமிழ்க்குமுகம் ஒற்றைத் தமிழ்க்குடும்பமாக மாற்றமடைந்திட முடியாது.

'தமிழ்நாடு' பெயரைப் போராடிப் பெற்ற பெருநாள் விழாவோ, சாதியை அரக்கனாய்க் கொளுத்தி அழிக்கவேண்டிய குறிப்பை உணர்த்துகிற விழாவோ, தொழிலாளர் பெருவிழாவோ, உழவர் பெருவிழாவோ, திருவள்ளுவர் விழாவோ - இவ்வகையானவற்றை எழுச்சியாய்த் தமிழர்கள் மேற்கொள்ளாவிடில் உழைத்து ஓடாய்க் கிடக்கும் இத் தொல்தமிழ்க்கூட்டம் விடுதலைப் பாதையைக் காண இயலாது.

கழகக் காலத்தில் உழைக்கும் இத் தமிழ்ப்பெருமக்களின் விழாக்களாக எவையெல்லாம் மேற்கொள்ளப்பெற்றன எனத் தொகுத்து, அவற்றை இன்றைய குமுகச் சூழலுக் கேற்ப - எவ்வகையில் இன்றைய ஆளுமைப் போக்குகளை மறுத்த வகையில் விழாக்களாக ஏற்பது என்பதும் ஆராயப்படவேண்டும்.

அவ்வகையில் முடிவெடுக்கப்பட்ட விழாக்களை பெரியஅளவில் சிற்றூர் தோறும் கொண்டாடுகின்ற வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இன்றைய ஆண்டைகளுக்கான விழாக்களில் உள்ள வெறித்தனங்களை, நம் அடிமைத் தனங்களை விளக்கி நிகழ்ச்சிகள் நடத்துதல் வேண்டும்.

அத்தகைய முயற்சிகளைச் சுட்டுவதும் அதற்கான கல்வியை ஊட்டுவதுமே தென்மொழி அன்பர்களின், தூயதமிழ்க் குடும்பத்தாரின் பெருங்கடமையாகும்.

மக்களவை

1. ஆங்கிலம் ஒரே மொழியே!

அன்புள்ள 'தென்மொழி' ஆசிரியரவர்களுக்கு,

வணக்கம், 'எபோனிக்சு' மொழி குறித்துத் தோழர். அ. மார்க்சு எழுதியிருந்தவை (தென்மொழி, சுவடி : 29; ஓலை : 2) குறித்த சில உண்மைகளைத் தங்கள் பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்ற திசம்பர்த் திங்களில் அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த பள்ளிகளை நெறிப்படுத்திச் செல்லும் வாரியம், 'ஆப்பிரிக்க வேர்களைக் கொண்டுள்ள மொழி' என்ற பெயரால் அமெரிக்காவிலுள்ள கறுப்பின மக்கள் பேசும் எபோனிக்சு என்ற 'கறுப்பு ஆங்கிலத்தை' தனியொரு மொழியாக ஏற்றுக் கொள்வதென முடிவு செய்தது. அம்முடிவினை எதிர்த்துக் கறுப்பின மக்கள் தலைவர்கள் தமக்கிடையிலே உள்ள அரசியல், கருத்துநிலை வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து கண்டனக் குரலெழுப்பினர். ஓக்லாந்து ஒன்றுபட்ட பள்ளி மாவட்டத்தினைச் சேர்ந்த தரோலின் தேவிசு என்ற பெண்மணி, கறுப்பின மக்கள் முன்னேற்றத்துக்கான தேசியர் கழகத்தினர். சேசுசி சாக்சன் (Jessie Jackson) வில்லியம் பார்னெட்டு போன்ற கறுப்பினமக்கள் தலைவர்கள் முதலியோர் தெரிவித்த எதிர்ப்பின் விளைவாக அமெரிக்க நடுவணரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்சொன்ன முடிவினை நீக்கியது.

அமெரிக்காவின் கல்வி, ஆட்சி, அறிவியல், பண்பாடு முதலிய அனைத்துத் துறைகளிலும் ஒரு குறிப்பிட்ட வகை ஆங்கிலமே - சீர்மையான அமெரிக்க ஆங்கிலமே - பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், அந்த ஆங்கிலத்தைப் பயில்வும் அதில் பயிற்சியும் புலமையும் பெறவும் அதன் வழிப் பாடங்களைப் படிக்கவும் கறுப்பின மக்களுக்கு வாய்ப்புத் தராமல், கறுப்பின மக்கள் பேசும் எபோனிக்சு என்ற கறுப்பு ஆங்கிலத்திலேயே அவர்கள் கற்பிக்கப்படுவார்களேயாயின், மேற்சொன்ன துறைகள் எதிலும் வாய்ப்பும் வெற்றியும் பயனும் கறுப்பின மக்கள் பெற இயலாது என்றும், எபோனிக்சு மொழியில் பயிற்றுவிக்கப்படுவது கறுப்பின மக்களை அவர்களது இன்றைய தாழ்வுநிலையில் முளையடித்துக் கட்டி வைத்துவிடும் என்றும் கறுப்பின மக்கள் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அது ஒருவகை இன ஒதுக்கல்முறை என்றும், ஓக்லாந்து பள்ளிகள் வாரியத்தின் முடிவு அவமானந்தரத் தக்கது என்றும் கறுப்பின மாணவர்களுக்குச் சீர்மையான அமெரிக்க ஆங்கிலத்தைக் கற்பிக்காது விடுதல் ஒரு குற்றமாகும் என்றுங்கூடக் கூறினர்.

கிளிண்டன் அரசு, அம் முடிவை நீக்கும் நடவடிக்கையை மேற்கொண்டதைக் கறுப்பின மக்கள் தலைவர்கள் வரவேற்றுள்ளனர் என்ற செய்தி தோழர் அ. மார்க்சு குறிப்பிடும் 'இந்து' ஆசிரியவுரையிலுங்கூடக் காணப்படுகிறது. கறுப்பின மக்களின் விடுதலைக்காகக் குரல்கொடுக்கும் புகழ்பெற்ற அமெரிக்கக் கறுப்பின எழுத்தாளர்களும் சீர்மையான அமெரிக்க ஆங்கிலத்தைத் தமது சொந்த மொழியாக ஏற்று அதனைத் தம் வயமாக்கிக் கொண்டுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறது.

அமெரிக்காவிலுள்ள ஆங்கிலம் பேசும் வெள்ளையர் அனைவருமே ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தவர்களின் வழித்தோன்றல்களல்லர். மாறாக, பல்வேறு ஐரோப்பிய மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டிருந்தோரின் வழித்தோன்றல்களேயாவர். அதே போன்று இன்றைய ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் (அமெரிக்காவிலுள்ள கறுப்பின மக்கள்) எல்லாருமே ஒரே ஒரு மொழியைப் பேசிவந்தவர்களின் வழித்தோன்றல்களல்லர். மாறாக, பல்வேறு ஆப்பிரிக்க மொழிகளைப் பேசிவந்த, பல்வேறு பழங்குடிகளையும் தேசிய இனங்களையும் சேர்ந்த ஆப்பிரிக்கர்களின் வழித்தோன்றல்களாவர். அவர்களிடையே வெள்ளையரின் குருதிக் கலப்புடையவர்களும் உண்டு. அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயரல்லாத ஐரோப்பியர்களின் வழித் தோன்றல்களும் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட ஆப்பிரிக்கர்களின் வழித் தோன்றல்களும் தம் தாய்மொழி யடையாளங்களை முற்றாக இழந்து ஆங்கில மொழியையே தாய்மொழியாகக் கொண்டதும் அம் மொழி யடையாளத்தையே பெற்றதும் தனிவரலாறு. கறுப்பர்கள் பேசும் எபோனிக்சைத் தனிமொழியாகக் கருதினால், அயர்லாந்தின் வழித்தோன்றல்களாய் உள்ள அமெரிக்க வெள்ளையர் பேசும் ஆங்கிலத்தையும் தனி மொழியாக ஏற்க வேண்டும். இக்குழுவினருக்கும் பொதுவானதுதான் சீர்மையான அமெரிக்க ஆங்கிலம். அது பிற அமெரிக்க வெள்ளையருக்கும் பொதுவான மொழிதான்.

தங்களன்புள்ள
எசு.வி. இராசதுரை

2. பன்முகப்படுத்துவதும் - பார்ப்பனியமே!

ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

தென்மொழி (சுவடி : 29, ஓலை : 2) இல் பேரா. அ. மார்க்சு அவர்களின் மடலைப் படித்தேன்.

அதற்கான விடையாக அதையே திரும்பவும் வேறு விளக்கங்களில் சொல்ல வேண்டியிருக்கிறது. கடந்த மடலில் அவர் குறிப்பிட்ட மேலுமான ஒரு செய்திக்கும் சேர்த்து விடை கூற வேண்டி இதை எழுதுகிறேன்.

முதலில், ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காக முடிந்ததைச் செய்ய எண்ணுகிறபோது - தாம் வகுப்பறையிலும், குடும்பத்திலும் எவ்வாறு ஓர் ஆளுமையினனாக வாழவேண்டியுள்ளது - என்று குறிப்பிடுகிறார் அ. மார்க்சு.

அ. மார்க்சு அவர்கள் இன்றைய குமுகத்தின் கட்டமைப்புக்காகத் தவிர்க்க இயலாமல் வகுப்பறையில் மாணவர்களை ஒடுக்கும் ஆசிரியனாகவும், குடும்பத்தில் மக்களையும், மனைவியையும் ஒடுக்கும் ஆணாகவும் வாழநேர்ந்தாலும், அவர் இக் கட்டமைப்பின் இத்தகைய ஆளுமைப் போக்குகளை மறுத்த அல்லது எதிர்த்த அரசியலை ஏற்றுக்கொண்டவரே ஆவார். அவர் அத்தகைய அரசியலை ஏற்றுக்கொண்டாலும்கூட அதைத் தம் அளவில், தம் குடும்ப அளவில் தனித்து மாற்றிவிட இயலாது. குமுகத்தினையே மாற்றாமல் குடும்ப வலைப் பின்னலும், கல்வியில் ஆளுமை நடைமுறையியலும் மாறிவிடப் போவதில்லை.

ஆக, அத்தகைய அரசியலை இணைத்துச் சிந்திக்காமல் அவர் தனிப்பட ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகச் செயல்படுவதாகக் கூறுவது தம்மைத்தாமே மறைத்துக்கொள்வதாக அமைந்திருக்கிறது.

'மக்கள் கல்வி இயக்கம்' - அனைத்துச் சிக்கலுக்குமான விடுதலையை நோக்கிய செயல்பாடுடைய ஒற்றை இயக்கம் இல்லைதான். ஆனால் அது பெண்ணடிமைத்தனத்தை ஞாயப் படுத்துவதாகவோ, ஆரியப் பார்ப்பனிய வல்லாண்மையை ஏற்றுக்கொள்வதாகவோ அமைத்துக் கொண்டு கருத்தறிவிக்கிற இயக்கம் இல்லையே. அது கல்விச் சிக்கலில் அதிகக் கவனம் செலுத்துகிறது என்பது சரி என்பது போலவே, மற்ற ஆளுமைப் போக்குகளையும் எதிர்க்கிறது. அவ்வகையில் இத் தமிழக மக்களின் விடுதலைக்கான அடிமைக் கூறுகள் அனைத்தையும் புறக்கணிக்க முடியாத வகையில் ஒருமுகப்படுத்தியே 'மக்கள் கல்வி இயக்கமும்' கருத்துச் செலுத்த முடியுமே தவிர, மற்ற ஆளுமைகளை ஏற்றுக்கொண்ட வகையில் பன்மைத் தன்மைக் கொண்டதாக இருந்திட இயலாது.

'ஒற்றைத் தன்மை' என்பது ஆளுமைக்கான கூறாக இருக்கிறது என்று கூறுகிற அ. மார்க்சு, பன்முகத்தன்மை என்பதும் ஒரு வகையில் ஆளுமைக்கான கூறாகவே இருப்பதையும் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

இந்திய ஒருமைப்பாடு என்று இந்துப் பார்ப்பனிய ஒற்றுமையை ஏற்கச் சொல்லுகிற ஒற்றைத்தன்மை - இந்தியாவில் உள்ள உழைக்கும் மக்களின் பன்மைத் தன்மைகளைக் கூறுபிரிப்பதையே நோக்கமாகக் கொள்ளுகிறது.

தொழிலாளர் ஒற்றுமையை விரும்பாத முதலாளி, தொழிலாளர் சிக்கல்களைத் தனித்தனியே பன்மை நிலைகளிலேயே அணுக முனைகிறான்.

இவ்வகையில், ஒரு முகப்படுத்திப் பிறரின் தனித்தன்மைகளை அழிப்பதும், தனித்தனி நோக்கங்களைப் பகுத்து ஒருமுக நோக்கத்தைச்

சிதைப்பதும் - எந்த அரசியலை நோக்கியது, யார் யார் நலனுக்கான அரசியலை நோக்கியது என்கிற அளவிலேயே எண்ணப்படும்.

எனவே, பொதுப்பட ஒற்றைத் தன்மை என்பதே ஆளுமைச் சிந்தனை என்றும், பன்முகத்தன்மை என்பதே ஆளுமையை எதிர்த்த சிந்தனை என்றும் குருட்டுப்பாடம் படிக்க இயலாது.

ஒடுக்கப்பட்ட தமிழக மக்களின் விடுதலைக்கான அரசியல் என்பது எவ்வகையில் எல்லாம் இத் 'தமிழக மக்களினம் அடிமைப்பட்டிருக்கிறதோ - அவற்றையெல்லாம் தாங்கி ஏற்றுக்கொள்ளுகிற அரசியலைக் கொண்டதாகவே இருந்திடல் முடியும். அவ்வாறு அல்லாமல் பன்முக அரசியலை ஏற்றுக்கொள்ளுகிற போது, அது ஒற்றைக் குமுகத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கப்படாமல் இருந்திட முடியாது. ஒற்றைக் குமுகத்திலிருந்து குமுகத்தின் ஒரு கூறைமட்டும் பிய்த்து அதற்கு மட்டும் ஒரு தனித் தீர்வை எண்ணிவிட முடியாது. அத்தகைய போக்கு பார்ப்பனியச் சிந்தனையாகவும், முதலாளியச் சிந்தனையாகவுமே இருந்திடல் முடியும்

இறுதியாக ஒன்று - கருப்பின மக்களின் மொழியாகத் தனி ஆங்கிலக் கோரிக்கை எழுகிறபோது - அதைக் கண்டு கிளிண்டனும், 'இந்து' - நாளிதழும் பேச்சு/இன வழக்குகளின் அடிப்படையில் ஆங்கில மொழியைக் கூறு போடலாகாது என்று கூறியுள்ளதைச் சுட்டி நீங்கள் யார் பக்கம் - கருப்பின மக்கள் பக்கமா? கிளிண்டன், 'இந்து' - நாளிதழ் பக்கமா என்று கேட்கிறார் அ. மார்க்சு.

முதலில் ஆங்கிலம் என்பதையே அந்த ஆளுமையர்களே ஒற்றை ஆங்கிலமாக ஏற்கவில்லை. ஆளுமை அரசின் அடிப்படையில் பிரிட்டிசு ஆங்கிலமாகவும், அமெரிக்க ஆங்கிலமாகவும், இந்திய ஆங்கிலமாகவும் இன்னும் பலவாறு பகுத்துள்ளனர். ஒருவர் மற்ற ஆங்கிலத்தை ஏற்பதில்லை.

இப்படியான சூழலில், கருப்பின மக்களின் ஆங்கில மொழி மட்டும் அல்ல - கருப்பின வாழ்க்கை உரிமைகளே மறுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்படுகின்றனர் கருப்பின மக்கள்.

கருப்பின மக்கள் தங்கள் மீதான ஆங்கில வேற்றின மக்களின் மொழியை ஆளுமை காரணமாக ஏற்க வேண்டி அமைந்துவிட்டது.

இத்தகைய அடிமைப்போக்கில் அவர்கள் அந்த மொழி ஆளுமையிலிருந்து மட்டும் அன்று. தங்கள் மீதான அனைத்து ஆளுமை வழிகளையுமே எதிர்த்துதான் தங்களின் விடுதலைப் போரை அவர்கள் நிகழ்த்த வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

எனவே, அவர்களின் உரிமைப் போரைக் கருப்பினர்க்கான தனி ஆங்கில உரிமைப்போர் என்பதாக மட்டும் அல்லாமல் பன்முகத்தின் ஒரு கூறாகச் சுருக்கிப் பார்த்திட முடியாது.

- தமிழநம்பி, சென்னை.

தமிழ்ஈழப் போராட்டம்

(**ஆசிரியர்** : பேராசிரியர், முனைவர். கா.பொ. இரத்தினம். **வெளியீடு** : பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், சென்னை - 111. **விற்பனையுரிமை** : காந்தளகம், 4, முதல் மாடி, இரகிசா கட்டடம், 834, அண்ணா சாலை, சென்னை - 600 002. விலை : உரு. 20.00)

'தமிழ்ஈழப் போராட்டம்', 'ஈழத் தமிழர்கட்கு ஆட்சியுரிமை கிடைக்குமா?', 'ஈழத் தமிழரின் ஆட்சியுரிமையும் இந்தியாவின் கடப்பாடும்', 'இலங்கையில் தமிழர் ஆட்சி', 'இலங்கையின் பழங்குடியினர் தமிழரே', 'இது நியாயமா?' என்னும் ஆறு கட்டுரைகளின் தொகுப்பே 'தமிழ் ஈழப் போராட்டம்' எனும் இந்நூல்.

தமிழ்ஈழக் கோரிக்கை எவ்வாறு முளைவிட்டது; இளைஞர்களிடையே விடுதலை இயக்கங்கள் எப்படித் தோன்றின என்பவற்றையும், அவற்றுக்கு அடிப்படையாகச் சிங்கள அரசு தமிழினத்துக்கு இழைத்த கொடுமைகளையும் விளக்குவதோடு, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து உயிர்கொடுத்துப் போராடி வருவதைச் சுட்டிக்காட்டிப் புலிகளுடன் உடன்படிக்கை செய்யப்படாவிடின் போராட்டத்தை நிறுத்த முடியாது என்பதையும் இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

இலங்கைச் சிக்கலுக்குத் தமிழ் ஈழ அரசே தீர்வு; தமிழினம் இழந்த ஆட்சியுரிமையை மீட்பதற்கே போராட்டம்; பிரிந்து வாழ்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது என ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

'வீடணனைச் சிங்களவர்கள் வழிபடுகிறார்கள்' என்பது (பக்.63) அரிய செய்தி. "ஆரியர் புகுத்திய திராவிடர் என்னுஞ் சொல்லை ஒழித்துத் தமிழரே தமிழ்நாட்டின் தலைஇனம் - தனியினம் எனக் கோடலே பொருத்தமானது". (பக். 52) என்று கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

அகிம்சை, துக்கம், துரோகம், விமோசனம், பலவந்தம், பிரேரணை, பிரகடனம் எனபனவும் பிறவுமான அயன்மொழிச் சொற்கள் தவிர்க்கப்பட்டுத் தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றிருப்பின் நன்று.

நூல் சிறிதாயினும் பயனுள்ள செய்திகளைத் தாங்கியுள்ளது.

- செம்பி

செய்திகள்

புரட்சிப் பாவலர் இலக்கியப் பாசறை - பாகூர்.

புதுவை - பாகூர்ப் புரட்சிப் பாவலர் இலக்கியப் பாசறையின் சார்பில் - தந்தை பெரியார் அரங்கில், தி.பி. 2028 கும்பம் 4, 5 (காரி, ஞாயிறு) ஆகிய இருநாள் நிகழ்ச்சியாகத் திருவள்ளுவராண்டு விழா - தமிழின எழுச்சி விழா நடைபெற்றது.

முதல்நாள் (15.2.'97) முற்பகல் இசையரங்குடன் நிகழ்ச்சி தொடங்கியது. மாணவர்களின் திருக்குறள் ஓவியக் கண்காட்சியும் தமிழ்மருத்துவக் கண்காட்சியும் திறந்துவைக்கப்பெற்றன. பிற்பகல் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவள்ளுவர், பெரியார், இரட்டைமலை சீனிவாசன், பாவாணர், பாவேந்தர், பாவலரேறு ஆகியோர் படங்கள் திறந்துவைக்கப்பெற்றன. தொடர்ந்து திருக்குறள் அரங்கம் நடைபெற்றது.

மறுநாள் (16.2.'97) முற்பகல் வழக்காடு மன்றமும் பதினாறு கவனக நிகழ்ச்சியும் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றன. பிற்பகல் அறிவியல் அரங்கம் பரிசளிப்பு நிகழ்ச்சி ஆகியனவும், பொது அரங்கமும் நடைபெற்றன.

இருநாள் நிகழ்ச்சிகளிலும் திருவாளர்கள் சொல்லாய்வு அறிஞர் அருளியார், தியாகு (தமிழ் - தமிழர் இயக்கம்), முனைவர் இரா. திருமுருகனார், பழ. கருப்பையா, மருத்துவர் வே.அருணாசலம், மா.செ.தமிழ்மணி (உ.த.மு.க.), ஈரோடை அரசமாணிக்கனார், திருக்குறள் பெருமாள், ஆரோ. செந்தமிழன், அறிவுடைநம்பி, சீனு. தமிழ்மணி, விழுப்பரையனார், வி.அழகரசன், ஆ.அருணாசலம், 'தடா' ஓபாலசுந்தரம், புலவர் இராவணன், அறிவுக்கண்ணு, தாமரைக்கோ, அரிமா பாண்டியன், உள்ளிட்ட அறிஞர்களும் பெருமக்களும் பங்கேற்றனர்.

திருவள்ளுவர் மழலையர் பள்ளி - ஆண்டு விழா!

சென்னை - திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளியின் ஆறாவது ஆண்டு நிறைவுவிழா தி.பி. 2028 மீனம் 23 காரி (5.4.'97) அன்று பிற்பகல் 5.30 மணிக்கு, திருவான்மியூர்ச் சிறீவித்தியா திருமண மண்டபத்தில், சென்னை வானொலி நிகழ்ச்சிப் பொறுப்பாளர் பாவலர் தென்கச்சி கோ.சுவாமிநாதன் அவர்கள் தலைமையிலும் அம்மை தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் வரவேற்புரை யாற்றினார். பள்ளி மாணாக்கர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன.

பாவலர் தென்கச்சி சுவாமிநாதன் பள்ளியின் முயற்சிகளையும் கலை நிகழ்ச்சிகளையும் பாராட்டியதோடு அவையோர் உளங்கொள்ளும் வண்ணம் உரைநிகழ்த்தினார். தொடர்ந்து திருவாட்டி மா.தேன்மொழியருளி மாணாக்கர்களுக்குப் பாராட்டுரை வழங்கிப் பரிசளித்தார். தலைமையாசிரியர் இறை.பொற்கொடி நன்றி நவின்றார்.

நூல் அறிமுகம்

நூற்பெயர் : தாழ்த்தப்பட்டோர் தலைமை
விலை : உரு. 10.00
வெளியீடு : தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்

தொடர்பு முகவரி:

தமிழ்ப்பாண்டியன்
சாணாப்புத்தூர்
ஏடூர் (அ.நி), கும்மிடிப்பூண்டி (வட்டம்)
செங்கை மாவ. 601 201.

பொருள் : குமுகாய மாற்றம் பற்றிய அலசல்.

நூலை அறிமுமாக்கும் முன்னுரை வரிகள் : "தாழ்த்தப்பட்டோர் தலைமை என்கிற அரசியல் நிகழ்விற்கு வந்த பின், இதை 'நபர் தலைமை' என்பதாகவும், 'சாதியத் தலைமை' என்பதாகவும் புரிந்து கொண்ட தவறான அரசியல் நடைமுறைகளையும் கணக்கில் கொண்டு, 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' என்பதன் அடிப்படை அரசியல் நிலைகளைத் தமிழக அரசியல் அரங்கில், அதன் உண்மையான பொருளில் தெளிவுபடுத்துவதற்கான தொடர்ந்த முயற்சியின் ஒரு பகுதியே இவ்வெளியீடு."

நூற்பெயர் : இன்குலாப் கவிதைகள் (தொகுதி-2)
பொருள் : ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை பற்றிய பாடல் தொகுப்பு நூல்
விலை : உரு. 10.00
வெளியீடு : தமிழாட்சிப் பதிப்பகம் சென்னை - 1.

கிடைக்குமிடம்: பஃறுளி பதிப்பகம்
183, வெங்கடரங்கம் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

நூலை அறிமுகமாக்கும் - முன்னுரை வரிகள்: "சிங்கள இனவெறி அரசின் தாக்குதல்களோடு இந்திய அரசின் தாக்குதல்களும் அணி சேர்ந்த காலகட்டம் அது. தமிழினம் விடுதலையுற்றுத் தலைநிமிர்ந்துவிடக் கூடாது என்பதில் சிங்கள வல்லாண்மையும் இந்திய வல்லாண்மையும் கைகோத்து நின்ற காலகட்டம் அது. தமிழினத்துக்கு எதிராக இந்திய

அரசு செய்த இரண்டகத்தை எதிர்க்க முனைந்தவர்களை இந்திய அரசும் அதன் எடுபிடிகளும் அச்சுறுத்திக் கொண்டிருந்த காலக்கட்டம் அது. அப்போது இந்திய அரசின் இரண்டகத்தைத் தோலுரித்து எழுதிய பாடல்களின் தொகுப்பு 'இன்குலாப் கவிதைகள்' (தொகுதி-2) என்று உங்கள் முன் வருகிறது."

நூற் பெயர் : **எங்கே எமது முகம்?**
ஆசிரியர் : **தலையாரி. (இ. தனராசு)**
வெளியீடு : **பஃறுளி பதிப்பகம்**
சென்னை-5.
பொருள் : **('தலித்து') எழுச்சிப் பாடல் தொகுப்பு.**

நூலைப் பற்றிய ஆசிரியரின் அறிமுகக் குறிப்பு :

"இந்தப் பாடல் தொகுப்பின் மிக முதன்மையான நோக்கங்களில் ஒன்று : நான் பாவலன் என்று காட்டிக் கொள்வது அன்று. ஒவ்வொரு சேரியிலும் என்னைவிடச் சிறப்பாக எழுதத் தெரிந்திருந்தும் எழுதாமல் இருக்கின்ற எண்ணற்ற தோழர்களை எழுதத் தூண்டுவதும் தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாற்றைத் தாழ்த்தப்பட்டவர்களே பதிவு செய்ய வேண்டிய சூழலை வளர்ப்பதும் ஆகும்".

நூற்பெயர் : **எகிறு**
ஆசிரியர் : **உஞ்சைராசன்**
விலை : **உரு. 20.00**
பொருள் : **சிறுகதைத் தொகுப்பு**
வெளியீடு : **பஃறுளி பதிப்பகம்**
சென்னை - 5.

ஆசிரியரின் நூலறிமுகக் குறிப்பு :

"தலைமுறை தலைமுறையாகப் பொங்கிவந்த சீற்றத்தையெல்லாம் ஆரஅமுது ஆற்றிக்கொள்ளக்கூட முடியாமல் நெஞ்சுக்குள் போடுகையில், பொங்கிவந்த செருமலைக்கூட 'எதிர்க் குரலாடா' என்று எரித்த தெல்லாந் தெரிந்தும்.... தலை கவிழ்ந்து கிடந்ததெல்லாம் தெரியாமலா போய்விடும்? யாரிடம் ஞாயம் கேட்பது? யாருடைய கையையுயர்த்துவது? யாருடைய ஞாயத்தையும் யாரும் வாங்கிக் கொடுத்ததாக வரலாறே இல்லை. அப்படி இருக்கையில் நம்மை நாமாகத்தான் விடுவித்துக்கொள்ளவேண்டுமென்றுதான் 'எகிற'த் தூண்டுகிறேன்."

பாவலரேறு தமிழ்க்களம்

க.அருள்மணி, வெங்காலூர்

எண்ணற்ற ஏடுகள் பணத்தையே முதலாக எண்ணி, தமிழ்ப் பண்பாட்டைப் பாடையேற்றிவரும் இற்றை நாளில் . . . . அன்றும் கூடத் தூயதமிழ் ஒன்றின் வாழ்வையே எண்ணி, எண்ணற்ற துன்பங்கள் கொண்டு, தனியொருவராகத் 'தென்மொழி,' 'தமிழ்ச்சிட்டு,' 'தமிழ்நிலம்' மூன்று இதழ்களையும் தூய தமிழில் நடத்திக் கொண்டிருந்த ஒற்றைத் தமிழ்ப் பேரறிஞர், ஒப்பற்ற பெரும் புலவர் நம்மைவிட்டு மறைந்த நாள் தி.பி. 2026 விடை 28 (11-6-1995).

எண்ணற்ற அறிஞர்கள், இந்த உலகில் மக்களின் நன்மையினை எண்ணி, எண்ணற்ற துறைகளில் பாடுபட்டு - தொண்டு புரிந்துள்ளனர், ஆனால் மொழிமானத்தை எண்ணி - இன மானத்தை எண்ணி - நாட்டு மானத்தை எண்ணி ஒற்றைத் தமிழராய்த் தமிழ், மொழி-இனம், நாட்டின் நன்மையையே ஓயாமல் எண்ணி எண்ணி உழைத்து உழைத்து நம்மை விட்டு மறைந்த நாள் அது!

எண்ணற்ற போலித் தமிழர்கள் - தலைவர்கள் தமிழ் மொழிக்கே தம் எண்ணம், எழுத்து பேச்சு வாழ்வு என்றெல்லாம் பொய்யுரை புகன்று புன்மையுற வாழ்ந்துவரும் இக் காலத்தில், அறிவு வந்த நாளிலிருந்து தம் ஆவி பிரிந்த நாள் வரை உண்மையாகத் தென்மொழிக்கு உழைத்த நற்றமிழர் நம்மை விட்டுப் பிரிந்த நாள் அந்நாள்!

மானமுள்ள தமிழன், நாணமுடன் வாழ மொழி மானத்தை முதலீடாக வைத்து விற்பனையற்று, கற்பனைக்கும் எட்டாத கனவில் கண்மூடும்வரை பாடுபட்ட ஒரு பெருமகனார் - தமக்கென ஒன்றையும் எண்ணிப்பாராது இந்தமொழிக்கென்றே, இனத்திற்கென்றே, நாட்டிற்கென்றே உண்மையாக உழைத்த ஒரே தமிழ்ப் புலவர் பாவலரேறு ஐயா அவர்கள் இந்த மண்ணிலிருந்து மறைந்தார்.

நாம் - தமிழர்களாகிய நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? உழைக்கிறோம் - உண்கிறோம்- உடுக்கிறோம்- உலாவுகிறோம்- உறங்குகிறோம் - ஒரு நாள் மறைகிறோம். இதுதான் மாந்தனின் பெருமையா? நன்றிக்கடன் எண்ணி நமக்காக, நம் மொழிக்காக வாழ்ந்தவர்கள், நம் இனத்திற்காக வாழ்ந்தவர்கள் நம் நாட்டின் நன்மைக்காக வாழ்ந்தவர்கள், பொன்னையும் பொருளையும் மனைகளையும் மாளிகைகளையும் விட்டுப் பிரியவில்லை. ஆனால் எல்லாவற்றிலும், மேலான அழியாத கருத்துக் கருவூலங்களை இம் மக்களுக்கென்று, நமக்கென்று விட்டுச் செல்கின்றனர். அப்படிப்பட்ட ஒப்பற்ற எளிமையான மாந்தரில் ஒருவரே தென்மொழியின் தந்தை பாவலரேறு ஐயா அவர்கள்.

" சிந்தனைதான் மூச்சு; சிந்தனைதான் பார்வை;
சிந்தனைதான் பேச்சு!

சிந்தனைதான் எழுத்து; சிந்தனை தான் செயல்;
சிந்தனைதான் வாழ்க்கை!
சிந்தனைதான் உலகம்”

- என்று கூறியவர்

“என்னைப் புகழவேண்டாம்; என் எழுத்தை மதிக்க வேண்டாம்;
கன்னல் தமிழை யன்றோ - நான்
காத்துக் கொள்ளச் சொன்னேன்!”

என்றும் கூறியவர்.

‘உரிமை’ என்பது உயிருக்கு ஊன்று கோல் போன்றது.
உடலுக்கு ஆடுகளம் போன்றது. உரிமையற்றவன், கோல்
இல்லாக் குருடனும் காலில்லா முடவனும் போன்றவன்”

என்றும்,

“மாணவப் பருவம் மாண்புடைப் பருவம்
மாண்பெனப்படுவது மனநாகரிகம்”

என்றும்,

படித்த மடயர் பாழ்செய்யும் உலகம்!
படித்த கயவரே வலம்வரும் உலகம்!
வீணர் நிறைந்த விளம்பர உலகம்!
நாண மற்றவர் நடக்கின்ற உலகம்!
கலையெனும் பெயரால் காமத்தைப் பாய்ச்சும்
புலையர் புகுந்த புழுக்கறை உலகம்!”

என்றும்,

“ அன்போ, அறிவோ அற்றவ னொருவனைப்
பண்புடையவனாய்ப் பண்ணுதல் வீணே”

என்றும் பல்லாயிரக்கணக்கான மாணிக்கக் கருத்துகளை நம் முன் கொட்டிய அப்பெரும் புலவரின் எழுத்து மணிகளைப் பாதுகாத்து நமக்கு - நம் பிறங்கடைகளுக்கு நாம் வைத்துக் காப்பாற்ற வேண்டிய பெருங்கடமைப் பொறுப்பு நமக்குண்டு.

இந்த நிலையில் தென்மொழியின் தந்தையாரின் நினைவாக - ஆம்; நினைவாகப் ‘பாவலரேறு தமிழ்க்களம்’ இன்றுவரை அப்படியே எண்ண அளவில்தான், எழுத்தளவில்தான் உள்ளது என்பதை நேரில் காணும்பொழுது நெஞ்சம் குமுறுகிறது - உள்ளம் உருகுகிறது. நன்றி கெட்ட தமிழர்கள் நாம். நன்றி கொன்ற தமிழர்கள் நாம் என்ற பழியை இன்னும் எத்தனை நாள் நம் தலையின்மேல் சுமத்தல் வேண்டும்?

ஒப்பற்ற முறையில் பாடுபட்ட பெருமகனாரின் நினைவகம் உருவாகட்டும்! நம் பிறங்கடைகள் நல்லதை எண்ணிப் பார்க்கட்டும்! மொழி நலம்பெற, இனம் நலம்பெற, நாடு நலம்பெற நல்லதை முயன்று செய்யட்டும்!

நமக்கு வந்த மடல்கள்.

0:1616: ஐயன்மீர், வணக்கம்!

தென்மொழி சுவடி-29 ஓலை-2 - இல் பொழிலன் வாழ்நாள் சிறையிருப்புச் செய்தி வந்து மனத்தை உலுக்கியது.

நாம் அடையவிருக்கும் குறிக்கோள் தொலைவில், இடைப்பட்ட தொலைவுக்குள் ஏற்பட்ட தொல்லை சிறிதெனவே எண்ணத் தோன்றுகிறது. பொழில் இளைஞர், தாங்கும் பெற்றியர். குறிக்கோளை அவர் காலத்தே அடைய முனைவோம்!

தங்களன்பின்
- புலவர். வை. வீராண்டான், அரிமழம்.

0: 1617: பேரன்புடையீர், வணக்கம்.

வரலாற்றுச் சிறப்புமிகுந்த ஐயா பாவலரேறு தமிழ்க்கள கால்கோள் விழாவும் திருக்குறள் மெய்ப்பொருளுரை நூல் வெளியீட்டு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கும் என எண்ணுகிறேன். வீழ்ந்த தமிழினத்தைத் தலை நிமிர்த்தத் தாங்கள் செய்துவரும் அரும்பணிக்கு என்னால் இயன்றவரை துணைநிற்பேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய
இரா. கவின்பணிஞன், புதுக்கோட்டை.

0:1618: அன்புடையீர், வணக்கம்,

அமைய விருக்கும் தமிழ்க்களம், பாவலரேறு அவர்களின் நினைவை என்றென்றும் நிலவுலகில் நிலைபெறச் செய்யும் வளர்முகக் களமாக ஓங்கிக் கொண்டேயிருத்தல் வேண்டும் என்பதே எளியேனின் பேரவா. திருக்குறள் மெய்ப்பொருளுரை, அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தை நுவலும் சால்பினது என்பதில் ஐயமில்லை. அவருடைய புகழை நிலைநிறுத்த வல்லது.

அன்புடன்
மா. தெசிணி, சென்னை - 4.

0:1619: அன்புள்ள அம்மா, வணங்கி மகிழ்கின்றேன்.

பாவலரேறு தமிழ்க்களக் கால்கோள் - திருக்குறள் மெய்ப்பொருளுரை வெளியீட்டு விழா வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பையும், நேரில் நூல் பெறும் பெருமையையும் இழந்துவிட்டேன். என்னால் இயன்றவரை பணிசெய்வேன். தம்பி பொழிலன் வழக்கு முடிவு செய்தித்தாளில் பார்த்தேன், மிகவும் வருந்தினேன்.

அன்புள்ள
வை. தமிழ்க்குமரன், திருவாரூர்.

0:1620 : ஐயா, தென்மொழியில் முன்னர் (சுவடி:28;ஓலை:8) வெளிவந்த திரு. நிலவனின் மடல் குறித்து இரு மடல்கள் (சுவடி:28;ஓலை:9) வெளிவந்தன. நீண்ட இடைவெளிக்குப் பின் (சுவடி:29;ஓலை:3) மீண்டும் ஒரு மறுப்புமடல் வெளிவந்துள்ளது. இதற்கான காரணம் விளங்கவில்லை. முன்னர் வெளிவந்த இரு மறுப்புகளும் சரியில்லை அல்லது போதாது என்று தென்மொழி கருதுகிறதா? அல்லது திரு. அரசமாணிக்கனார் ஐயா கருதுகிறாரா? அதன் உட்செய்திகளுக்குள் நான் போக விரும்பவில்லை. திரு. நிலவனின் மடலில் கொச்சைப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் திரு. தமிழ்மாறன் ஐயா அவர்களே இன்னும் அது குறித்து மூச்சுவிடாத போது வேறு என்ன செய்யமுடியும்!

ஆனால் ஒன்று. திரு. அரசமாணிக்கனார், பாவலரேறு ஐயாவைப் பற்றித் திரு. தமிழ்மாறனார் என்ன பேசினார் என்பது பற்றித் தமது மடலில் குறிப்பிடாமலே பெரியாரை நுழைக்கிறார்.

- இளங்கோவன், ஈரோடை

தென்மொழி வெளியீட்டு உரிமை அறிக்கை!

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச்சட்டம் - 1956
19-ஈ.ஆ.(வகுப்பு 8ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம் :		: சென்னை
2. காலமுறை :		: மாதம் ஒரு முறை
3. அச்சிடுவோர் :	பெயர்	: திருவாட்டி மா. தாமரை (எ) மா. கமலம்
	இனம்	: தமிழர்
	முகவரி	: தென்மொழி அச்சகம் சென்னை - 5.
4. வெளியிடுவோர் :	பெயர்	: திருவாட்டி மா. தாமரை
	இனம்	: தமிழர்
	முகவரி	: தென்மொழி அச்சகம் சென்னை - 5.
5. ஆசிரியர் பெயர் :		: திருவாட்டி மா. தாமரை சென்னை. 5.
ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் :		: திருவாட்டி மா. தாமரை

மா. தாமரையாகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

10-4-1997 மா. தாமரை
சென்னை -5. (ஒப்பம்)

வீரப்போராளி...

- முனைவர் கடவூர் மணிமாறன்

('பாரதிதாசன் பெருஞ்சித்திரனார் பாடல்கள் ஓர் ஒப்பாய்வு' - முடிவுரை)

இவ்வாய்வில் பாடுபொருள் ஒப்பீடும், படைப்பு முறை வெளிப்பாடும், தமிழுணர்வு, குமுகாய நோக்கு, கதை நெடும்பாடல்கள், சொல்லாட்சியும் நடையும் ஆகியன பொதுவான முறையிலும் சிறப்பான வகையிலும் மதிப்பீடு செய்யப்பெற்றுள்ளன. இரு பாவலர்களிடையே நிலவும் ஒற்றுமைக் கூறுகள், வேற்றுமைக் கூறுகள், பொதுமைக் கூறுகள் ஆகியன எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. இவ்வாய்வில் கண்ட மெய்ம்மைகள் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

1. பாடுபொருள்களைத்தெரிவு செய்வதில் இருவரும் ஒருமித்த உணர்வாளர்களாகத் திகழ்கின்றனர்.

2. மொழி, இன, நாட்டு விடுதலையில் - மீட்சியில் இவ்விருவரும் உயரிய குறிக்கோளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

3. வடமொழி எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தமிழ்காப்பு, தனித்தமிழ் ஆகியவற்றில் சமன்பாடு கொண்ட இவர்கள் தமிழுணர்வு தழைத்துச் செழித்தோங்க வேண்டும் என்ற தணியாத வேட்கை மிக்கவர்களாக விளங்குகின்றனர்.

4. குமுகாய மறுமலர்ச்சிப் பார்வைமிக்க இவ்விருவரும் பெண்ணுரிமைகள், பொதுமை நலன்கள், உரிமை வேட்கைகள் ஆகியன காக்கப்பட வேண்டும் என்பதில் முனைப்புக் கொண்டவர்களாக ஒளிர்கின்றனர்.

5. உழைப்பாளர்களின் மேன்மை, சாதி மதப் பிணக்கற்ற நிலை, வறியர், செல்வர் என்ற வேறுபாடின்மை ஆகியவற்றிற்காக இருவரும் உரத்துக் குரல் கொடுக்கின்றனர்.

6. மாந்த நேய உணர்வுகள் இருவரின் பாடல்களிலும் மேலோங்கிச் சிறக்கின்றன.

7. கதை நெடும் பாடல்களிலும் மகளிர் முன்னேற்றம் கருதிப் பெண்மைக்கு ஏற்றம் தந்து குமுக விடுதலையை இருவரும் வலியுறுத்துகின்றனர்.

8. சொல்லாட்சிச் சிறப்பிலும் நடைநயத்திலும் தனித் தன்மையுடன் இருவரும் விளங்குகின்றனர். பாரதிதாசன் நடையில் இயல்பும் எளிமையும் மிகுதி. பெருஞ்சித்திரனாரின் நடையில் புதுச்சொல் புனைவும் பழஞ்சொற்களைப் புதுக்கிக் காட்டலும் மிகுதி. சொல்லாட்சியிலும் நடையிலும் தோய்ந்த கழக இலக்கிய ஈடுபாட்டுத் தன்மை இருவரிடத்தும் வெளிப்படுகின்றது.

9. தமிழரின் பண்பாடு, நாகரிகம், கலை, உயர்வு, மொழி ஆகியவற்றின் கலப்புக்கும் அழிவுக்கும் கரணியமாய் இருப்பது ஆரியமே என்பதில் இவ்விருவரும் அழுந்திய நோக்கும் போக்கும் கொண்டுள்ளனர்.

சிறிதேனும் தமிழ்த்தொண்டு செய்வீர்!

- பாவலர். ப. எழில்வாணன்

1. பனையளவு பணத்தாலே உயர்வதற்கு விரும்பிப்
பறக்கின்ற பாழ்தமிழீர்! உயர்ந்திடுக! எனினும்
தினையளவில் சிறிதேனும் தமிழ்த்தொண்டு செய்து
தீந்தமிழின் நலமதனை உயர்த்தியதும் உண்டா?
கனவினிலே மிதக்கின்றீர்! பதவிநலம் தேடிக்
களிக்கின்றீர்! குறைவின்றிக் களித்திடுக! எனினும்
மனமகிழ்ந்து தமிழ்க்காக உழைக்கின்ற அறிஞர்
வழிபோற்றித் துணைநின்று களித்ததுவும் உண்டா?

2. அன்றாடம் பட்டுடுத்தி மகிழ்ந்திடவே நினைக்கும்
அழிதமிழீர்! பட்டுடுத்தி மகிழ்ந்திடுக எனினும்!
மன்றாடித் தூயதமிழ் இதழ்நடத்தி மெலியும்
வல்லவர்க்குப் பொருளீந்து மகிழ்ந்ததுவும் உண்டா?
குன்றுயரம் வளமனைகள் அமைப்பதற்குத் துடிக்கும்
குறுந்தமிழீர்! பலமனைகள் அமைத்திடுக! எனினும்
மன்றுதனில் அல்லாமல் கோயிலிலும் தூய
வளர்தமிழே முழங்கவழி அமைத்ததுவும் உண்டா?

3. திரைப்படமே உயர்வென்று நினைத்திங்கே திரியும்
தேய்தமிழீர்! உயர்வென்று நினைத்திடுக! எனினும்
அரைகுறையாய்ப் பசியகற்றி ஆருயிரைத் தமிழ்க்கே
அளித்தவரை உயர்வென்று நினைத்ததுவும் உண்டா?
தரையுலகில் பிறமொழியைப் போற்றியுளம் களிக்கும்
தாழ்தமிழீர்! பிறமொழியைப் போற்றிடுக! எனினும்
திரைகடல்சூழ் உலகினிலே மூத்தமுதல் மொழியே
தீந்தமிழ்தான் எனஎண்ணிப் போற்றியதும் உண்டா?

4. நகைநகையாய்ப் பலவாங்கி நகைத்திங்கே வாழும்
நைந்தமிழீர்! நகையாவும் வாங்கிடுக! எனினும்
தொகைதொகையாய் நூல்படைத்துத் தூயதமிழ் காக்கும்
தொண்டர்களின் தமிழ்நூல்கள் வாங்கியதும் உண்டா?
வகைவகையாய் உண்பொருளைச் சுவைப்பதற்குத் துடிக்கும்
வசைத்தமிழீர்! விருப்பம்போல் சுவைத்திடுக! எனினும்
பகைபகையாய்ச் சூழ்ந்துள்ள தமிழ்ப்பகையை வீழ்த்திப்
பழுத்தவெற்றிக் கனிபறித்துச் சுவைத்ததுவும் உண்டா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2 - ஆவது ஆண்டு நினைவு மலர்

நம் பாவலரேறு ஐயா அவர்களின் இரண்டாவது நினைவுநாளான தி.பி. 2028 விடை 28 அன்று (11.6.96) வெளிவரும் தென்மொழி இதழ் பாவலரேறு பெருஞ்சித்திரனார் இரண்டாவது ஆண்டு நினைவு மலராக வெளிவர உள்ளது.

இம் மலரில்

- அரசியல் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள், பாவலர்கள், கலைவல்லுநர்கள் முதலானோர் ஐயா அவர்களைப் பற்றி வழங்கும் கட்டுரைகள், பாடல்கள் இடம் பெற உள்ளன.

- தென்மொழி அன்பர்கள் தங்களிடமுள்ள - ஐயாவுடன் தொடர்புள்ள அரிய ஒளிப்படங்கள், அரிய நிகழ்ச்சிக் குறிப்புகள், மடல்கள் ஆகியவற்றை மலரில் வெளியிடுவதற்கான வகையில் அனுப்பவேண்டுகிறோம். சுவையான நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தக்க சான்றுகளுடன் விடுப்பின் நன்று.

- மலர், தோராயமாக நானூறு பக்கங்களைக் கொண்டதாக அமையும். விளம்பரப் பகுதியும் இடம் பெற இருப்பதால் விளம்பரங்களுக்கு முந்திக்கொள்ள வேண்டுகிறோம்.

- தேவையான படிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தென்மொழி
சென்னை - 600 005.

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
நினைவு மலர்க் குழுவினர்

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. (தொலைபேசி : 851 7829)